உ

கடவுள் துணை.

சாமுத்திரிக லக்ஷண சாஸ்திரம்.

இஃது

கீர்வாண பாஷையினின்று திராவிட பாஷையில்

வித்வான்-ஈகை-வரதாசாரியராலும்

ஆங்கிலேயபாஷையில்

பீ - ஏ - லக்ஷ்மணபிள்ளையவர்களாலும்

மொழிபெயர்க்கப்பட்டு

பாரெஸ்ட் ஆபீஸ் எட் அகவுண்டாண்டு

சி - தாத - குருசாமி முதலியாரால்

அச்சியற்றப்பட்டது,

முதற்பதிப்பு.

MADRAS:

PRINTED AT THE EMPRESS OF INDIA PRESS.

1892:

All Rights Reserved.

Price

உ
கடவுள்துணை

முகவுரை.

சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த நம்முன்னோர்கள் மிகச்சிறந்த அனேகநூல்களை நமக்கு இம்மை மறுமை சுகங்களைத் தருவனவாக வருளிச்செய்தனர். ஆயினும் அவைகள் பெரும்பாலும் வடமொழியில்செய்யப்பட்டு அப்பாஷை உணர்ந்தோர்களுக்கே அறியத்தக்கவைகளாகிவிட்டன. ஆதலின் அவைகளின் பொருளை அறிந்து ஆயுள், செல்வம், புகழ், புத்திரகளத்திராதி சம்பத்து, சீலம், பேரின்பம் ஆகிய இப்பலன்களை பூரணமாக வடைவதுமின்றி நாம் வருந்தவும் நேரிடுகின்றது. ஆகையால் அந்நூல்களைக் கற்றவரும் மற்றவரும் எளிதிலுணர்ந்து உய்யும் வண்ணம் சில சமஸ்க்ருத வித்வான்களைக்கொண்டு தமிழில் எளியநடையில் வெளியிடக் கருதி முதற்கண் அவைகளில் நமது ஜென்மாந்தர நல்வினை தீவினைகளுக்கீடாக நாம் தற்காலம் அனுபவிக்கிறவைகளும் இனி அனுபவிக்க போகிறவைகளுமாகிய சுபாசுப பலன்களை நம் சரீரலக்ஷணங்களைக்கொண்டே கண்ணாடிபோல் விளக்குவதாகி சோதிடத்தின் ஒருவகுப்பாகிய சாமுத்திரிகசாஸ்திரமானது, ஸ்காந்தபுராணம், ஆலாஸ்யமான்மியம், ப்ருஹத்சம்ஹிதை, போஜனகுதூஹலத்தில் அடங்கிய விபாவரி விலாசமென்னும்ப்ரகரணம், இராமாயணம் இவைகளினின்றும் மற்றும் சிலவடமொழி நூல்களினின்றும் திரட்டப்பட்டு புருஷஸாமுத்திரிகம் ஸ்திரீசாமுத்திரிகம் என இரண்டு பிரிவுகளையுடையதாகிய ஒரு நூலாகச் செய்யப்பட்டு, இரண்டு பாகமாக வெளியிடப்பட் டிருக்கிறது. அதில் முதல்பாகம் சுலோகங்கள் (தெலுங்கிலும்) பதப்பொருள், பொழிப்புரை முதலியவைகள் தமிழிலும், ஆங்கிலேயபாஷையில் தர்ஜமாவும், உடையதாயிருக்கிறது. இரண்டாவதுபாகமோ முற்றும் தமிழில் எளியவசன நடையாகச் செய்யப்பட் டிருக்கிறது. இதில் எங்கள் தரத்திற்கு அமையாமையாலோ போதுமான அவகாச மின்மையாலோ நேரிடும் பிழைகளைப் பொறுத்து இதின் குணங்களையே ஹம்சங்களைப்போலப் பிரித்தங்கிகரிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

கல்வியின் பெருமையறிந்த கனவான்கள் அனைவரும் இந்நூலை ஆதரித்து என்னுடைய முயற்சியை சபலமாக்குவார்களென்று நம்புகிறேன்.

ஸ்திரீகளிடத்தும் புருஷர்களிடத்தும் விதிப்படி ஆராய்ந்து இந்நூலின் லட்சணங்களைப் பரிசோதிக்கில் ஆயுள், செல்வம், புகழ், சீலம், புத்திரகளத்திராதிசுகம் ஆகிய இவைகளும் மற்றுமுள்ளவைகளும் இவ்வளவின வென்று ஒவ்வொருவரும் எளிதிலறியலாம்.

இங்ஙனம்,
தா - குருசாமிமுதலியார்.

ஸ்ரீபரப்ரம்மணேநம:.

புருஷ ஸாமுத்திரிகம்.

ஸ்ரீவராஹ மிஸிரரென்னும் மஹா வித்துவான் இயற்றிய ஸகலசாஸ்திரச் சுருக்கமான பிருஹத் ஸம்ஹிதையில் ஸாமுத்திரிக சாஸ்திரப்ரகரணமான இந்த அறுபத்தெட்டாவது அத்தியாயத்தில் நூற்றுப்பதினேழு சுலோகங்களால் புருஷலக்ஷணம் சொல்லப்படுகின்றது.

In this Sixty-eighth chapter of the Samuthrika Sastra found in Brihat Samhita an abstract of several sciences we shall describe in One hundred and seventeen stanzas "the features of Man."

శ్లో॥ ఉన్మానమానగతిసం హతిసారవర్ణ స్నేహస్వరప్రకృతి సత్త్వమనూకమాదౌ।
క్షేత్రంమృజాంచ విధివత్కుశలోవలోక్య సాముద్రవిద్వ దతియాతమనా
గతంచ॥ ॥ ౧ ॥

(சுலோகம்) உன்மாநமாநகதி ஸம்ஹதிஸாரவர்ண ஸ்நேஹ ஸ்வரப்ரக்ருதி ஸத்வ மநூசமாதௌ-க்ஷேத்ரம் ம்ருஜாஞ்சவிதிவத் குசலோவலோக்யஸாமுத்ரவித்வ ததியாதமநாகதஞ்ச.

பதம்.	பொருள்.
குசல:	சமர்த்தனான
ஸாமுத்ரவித்	ஸாமுத்திரிகசாஸ்திரத்தையறிந்த
(நர:	மனிதன்)
ஆதௌ	முதலில்
உன்மாந	பாதந்தொடங்கி தலைவரையில் உள்ள அங்குல அளவை
மாந	தராசில் எடுத்த அளவை
கதி	நடை
ஸம்ஹதி	சரீரபுஷ்டி
ஸார	இரக்தம் - மாம்ஸ முதலிய ஸாரம்
வர்ண	சரீரத்தின் நிறம்

ஸ்நேஹ	சரீரத்தில் ஐந்திடங்களிலிருக்கிற எண்ணெய்போன்ற ஒருவிதஜலம்
ஸ்வர	குரலோசை
ப்ரக்ருதி	சுபாவத்தினுடைய
ஸத்வம்	நிலை (ஆகிய இவைகளையும்)
அநூகம்	முகத்தினால் அறியத்தக்க சீலத்தையும்
க்ஷேத்ரம்	சரீரத்தையும்
ம்ருஜாஞ்ச	முத்தி லாடுவதுபோல் சரீரத்திலாடுகிற நிழலையும்
விதிவத்	சாஸ்திரத்தின்படி
அவலோக்ய	பார்த்து
யாதம்	நடந்தபலனையும்
அநாகதஞ்ச	வரப்போகிற பலனையும்
வததி	சொல்லுகிறான்.

(பொழிப்புரை) சமர்த்தனான சாமுத்திரிக ஸாஸ்திரத்தைக் கற்றுணர்ந்தபுருஷன் ஒருவனுக்குபலத்தைச் சொல்லவேண்டுமாகில் முதலில் அவனுடையபாதந்தொடங்கித் தலைவரையில் உள்ள அங்குலஅளவு, தராசில் தூக்கி எடுத்த அளவு, நடை, சரீரபுஷ்டி, ரக்தம் மாம்ஸம் முதலிய ஸாரம், சரீரத்தின் ஒளி, சரீரத்தில் ஐந்திடங்களிலிருக்கிற ஒருவித எண்ணெய் போன்ற ஜலம், குரல், ஸ்வபாவ நிலை ஆகிய இவைகளையும், முகத்தினால் அறியத்தக்க சீலத்தையும், சரீரத்தையும், நிழலையும் (முத்தின் நடுவில் ஆடுவதுபோல் சரீரத்தில் ஆடும் நிழலையும்) சாஸ்திரத்தின்படி பார்த்து நடந்தபலனையும் வரப்போகிற பலனையும் சொல்லுகின்றான்.

An expert well-versed in the Sāmuthrika Sāstra will relate the past incidents and to predict the fortunes of any man, first ascertain the height of the man in inches by measuring, second his weight by weighing in a balance, and by indications in his face ascertain the following, Gait, the size of his body, the nature of his blood, flesh and the like, the gloss of his body, the peculiarities of the oily secretions obtained in the five different parts of his body, his voice & his disposition and then by referring also to the peculiar shadow or complexion of his body (as the shadow visible in the sides of glistening pearl) (1)

శ్లో॥ అస్వేదనౌమృదుతలౌ కమలోదరాభౌ శ్లిష్టాంగుళీ రుచిరతామ్రనఖౌ సుపార్ష్ణీ। ఉష్ణౌ శిరావిరహితౌ సునిగూఢగుల్ఫౌ కూర్మోన్నతౌచచరణౌ మనుజేశ్వరస్య ॥ ॥ ౧ ॥

(க-ம்) அஸ்வேதநௌ ம்ருதுதலௌ கமலோதராபௌஸ் லிஷ்டாங்குளீருசிர தாம்ரநகௌ ஸுபார்ஷ்ணீ - உஷ்ணௌ ஸிராவிரஹிதௌ ஸுநிகூடகுல்பௌ கூர்மோந்நதௌச சரணௌ மநுஜேஸ்வரஸ்ய.

பதம்.	பொருள்.
அஸ்வேதநௌ	வேர்வையற்றவையும்.
ம்ருதுதலௌ	மெதுவான உள்ளங்காலையுடையவையும்
கமல	தாமரை மலரின்
உதர	உட்புறத்திலுள்ள
ஆபௌ	காந்திபோன்ற காந்தியை யுடையவையும்
ஸ்லிஷ்டாங்குளீ	சேர்ந்த விரல்களை யுடையவையும்
ருசிர	அழகுள்ளவையும்
தாம்ர	சிவந்தவையுமான
நகௌ	நகங்களையுடையனவும்
ஸுபார்ஷ்ணீ	அழகிய குதிகால்களையுடையவையும்
உஷ்ணௌ	சூடானவையும்
ஸிராவிரஹிதௌ	மேல்தெரிகிற நரம்புகளில்லாதவையும்
ஸுநிகூட	நன்றாகமறைந்திருக்கிற
குல்பௌ	கணுக்கால்களையுடையவையும்
கூர்மோந்நதௌ	ஆமைபோலுயர்ந்தவையுமான
சரணௌ	பாதங்கள்
மநுஜேஸ்வரஸ்ய	அரசனுக்கு
(பவத:	ஆகின்றன.)

(பொ-ரை) வேர்வையற்றவைகளும், மெதுவாகிய உள்ளங்காலை யுடையவைகளும், தாமரைமலரி னுட்புறம் போன்றவையும், சேர்ந்த விரல்களையுடையவையும், அழகுள்ளவாகிச் சிவந்த நகங்களையுடையவையும், அழகிய குதிகால்களையும் மேல் தெரியாமல் அமிழ்ந்து மறைந்திருக்கிற கணுக்கால்களை உடையவையும், மேல்தெரிகிற நரம்புகளில்லாதவையும், ஆமைபோலுயர்ந்தவையுமான பாதங்கள் மஹாராஜனுக்கு ஆகின்றன.

எண்பத்தேழு ஸ்லோகங்களால் க்ஷேத்திரமென்னும் சரீரத்தின் லக்ஷணத்தைச் சொல்லுகிறார்.

The following eitghty-seven stanzas give a description of the physical features of the body.

Feet.

If the feet be dry, the soles soft and of the colour of the interior of the lotus, the toes close, the nails beautiful & red, the ankles deepset and not visible; the sinews & tendons inivisible and raised like the turtle he will be a King. (2)

శ్లో॥ శూర్పాకారవిరూక్షపాండురనఖౌ వక్రౌ శిరాసంతతౌ సంశుష్కౌ విరళాంగుళీచ చరణౌ దారిద్ర్య దుఃఖప్రదౌ। మార్గాయోత్కటకౌ కషాయ సదృశౌ వంశస్య విచ్ఛిత్తిదౌ బ్రహ్మఘ్నౌ పరిపక్వమృద్ద్యుతి తలౌ పీతౌ వగమ్యారతౌ॥ ॥ 3 ॥

(சு-ம்) சூர்ப்பாகாரவிரூக்ஷபாண்டுரநகௌ வக்ரௌ ஸிராஸந்ததௌ-ஸம்ஸுஷ்கௌ விரளாங்குளீசசரணௌ தாரித்ரியதுக்கப்ரதௌ-மார்க்காயோத்கடகௌ கஷாயஸத்ருசௌ வம்சஸ்ய விச்சித்திதௌ ப்ரம்ஹக்நௌ பரிபக்வ ம்ருத்த்யுதிதலௌ பீதாவகம்யாரதௌ.

பதம்.	பொருள்.
சூர்ப்ப	முறத்தினுடைய
ஆகார	ரூபம்போன்ற ரூபத்தையுடையவை யும்
விரூக்ஷ	முரடாகி-கோணிஅழகில்லாதவையும்
பாண்டுர	வெளுத்தவையுமான
நகௌ	நகங்களையுடையவையும்
வக்ரௌ	கோணியிருப்பவையும்
ஸிராஸந்ததௌ	நரம்புகளால் நிறைந்தவையும்
ஸம்சுஷ்கௌ	நன்றாக உலர்ந்திருப்பவையும்
விரளாங்குளீச	விலகியிருக்கிற விரல்களையுடையவை களுமான
சரணௌ	பாதங்கள்
தாரித்ரிய	வறுமையினுலுண்டாகிய
துக்க	துக்கத்தை
ப்ரதௌ	கொடுப்பவைகளாகவும்
உத்கடகௌ	பெரிதாகிய பாதங்கள்
மார்க்காய	வழிநடப்பதற்காகவும்
கஷாய	அழுக்கடைந்த சிவப்பு நிறத்தோடு

ஸத்ருஶௌ	சரியான நிறமுடைய பாதங்கள்
வம்ஶஸ்ய	குலத்திற்கு
விச்சித்திதௌ	நாசத்தைத் தருகிறவையும்
பரிபக்வம்ருது	சுட்டமண்ணின்
தியுதி	தாந்திபோன்ற சாந்தியை யுடைய வையான
தலௌ	உள்ளங்கால் களையுடைய பாதங்கள்
ப்ரம்ஹக்நௌ	பிரம்மஹத்தியைசெய்கிறவைகளும்
பீதௌ	பொன்னிறமான உள்ளங் காலையுடைய பாதங்கள்
அகம்யா	புணரத்தகாத மாதரிடத்தில்
ரதௌ	ஆசையைத் தருகிறவையுமாக
(பவத:	ஆகின்றன)

(பொ-ரை) முறம்போன்ற ஆகாரத்துடன் முரடாகிக் கோணியும், அழகின்றி வெண்ணிறமுடைய நகங்களையுடையவையும், மிகவும் கோணியிருப்பவையும்வெளியில் காணப்படுகிற நரம்புகளால்நிறைந்தவையும், சதையின்றி நன்முக உலர்ந்தவையும், நெருங்காதபடி விலகியிருக்கிற விரல்களையுடையவைகளுமாகிய பாதங்கள்; தாரித்திரியதுக்கத்தைத் தருகின்றவைகளாம். பெரிதாகிய பாதங்கள் வழிநடைக்காகவும் அழுக்குச் சிவப்புநிறமுடைய பாதங்கள் வம்ச நாசத்தைத் தருகின்றவையும் சுட்டமண்ணிறமுடைய பாதங்கள் பிர்மஹத்தியில் மூட்டுகின்றவையும் மஞ்சள் நிறமுடைய பாதங்கள் புணரத்தகாத மாதரிடத்தில் ஆசையை விளைவிக்கின்றவையுமாகின்றன.

If the feet be like seives crooked and bent, the nails white and crooked, the tendons visible; if the feet are lean and the toes far iapart he will be poor. If the feet be large, he will walk much; if they are of a beautiful red colour his family will perish; if they have colour of burnt clay he will be the murderer of a Brahmin; if they are of a yellow colour he will make illegal love with women. (3)

శ్లో॥ ప్రవిరళతనురోమ వృత్తజంఘాద్వి రదకరప్రతిమైర్వ రోరుభిశ్చ।
ఉపచితసమజానవశ్చభూపాః ధనరహితాశ్శ్వ సృగాలతుల్యజంఘాః॥ ॥౪॥

(சு-ம்)ப்ரவிரள தநுரோம வ்ருத்த ஜங்காத்விரத கரப்ரதிமைர் வரோருபிஶ்ச-உபசிதஸம ஜாநவஶ்சபூபா: தநரஹிதாஶ் ஶ்வஸ்ருகால துல்யஜங்கா:

பதம்.	பொருள்.
ப்ரவிரள	நெருங்காதவைகளும்
தநு	மெல்லியவைகளுமான
ரோம	மயிர்களையுடையவையும்
வ்ருத்த	உருண்டிருப்பவைகளுமான
ஜங்கா	முழங்காலின் கீழ்ப்புறங்களை உடையார்களும்
த்விரத	யானையினுடைய
கரப்ரதிமை:	துதிக்கையை ஒத்திருப்பவையுமான
வரோருபி:	சிறந்த துடைகளால்
உபசித	பருத்திருக்கிறவையும்
ஸம	ஒன்றோடொன்றுசரியானவையுமான
ஜாநவஶ்ச	முழங்கால்களையுடையவர்களும்
பூபா:	அரசர்களாகவும்
ஶ்வ	நாய்
ஸ்ருகால	குள்ளநரி ஆகிய இவைகளுடைய ஜங்கையோடு
துல்ய	சரியான
ஜங்கா:	முழங்காலின் கீழ்ப்புறங்களைப் பெற்றவர்கள்
தநரஹிதாஶ்வஶ்	செல்வமில்லாதவர்களாகவும்
(பவந்தி:	ஆகின்றனர்)

(பொ-ரை) நெருக்கமின்றி மெல்லிதாய் முளைத்தெழுந்த மயிர்களையுடையவையும் உருண்டிருப்பவைகளுமாகிய முழந்தாளின் கீழ்ப்புறத்தையுடையார்களும் யானைத்துதிக்கைபோன்ற சிறந்த துடைகளோடு கூடினவர்களும் பருத்து ஒன்றோடொன்று சரியான முழந்தாள்களையுடையார்களும் அரசர்களாகின்றனர். நாய், குள்ளநரி ஆகிய இவைகளின் ஜங்கைபோன்ற முழங்கால் கீழ்ப்புறத்தின் ஜங்கையுடையார்கள் தனமின்றி தரித்திரராகின்றனர்.

Knees and Thighs.

If the shanks below the knees are covered with thin and scattered hair and if they are round and if the thighs are well-formed like the trunk of the elephant and if the knees are alike in all respects he will be a King. If on the other hand they are like those of the fox, the dog and like animals, he will not be rich but live poor. (4)

శ్లో॥ రోమైకైకంకూపకే పార్థివానాంద్వేద్వేజ్ఞేయేపండిత శ్రోత్రియాణాం।
త్ర్యాద్యైర్నిస్స్వామానవాదుఃఖ భాజః కేశాశ్చైవం నిందితాఃపూజితాశ్చ॥

(சு-ம்) ரோமை கைகம்கூபகே பார்த்திவாநாம் த்வேத்வேக்ஞேயே பண்டிதஸ் ரோத்ரியாணும் - த்ரியாத்யைர் நிஸ்வா மாநவா து:கப் பாஜ: கேசாஸ் சைவம் நிந்திதா: பூஜிதாஸ்ச.

பதம்.	பொருள்.
பார்த்திவாநாம்	அரசர்களுக்கு
கூபகே	உரோம கூபத்தில்
ஏகைகம்	ஒவ்வொன்ருகிய
ரோம	மயிரானது
பவதி:	உண்டாகிறது
பண்டித	கற்றுணர்ந்தவர்களான
ஸ்ரோத்ரியாணும்	வேதம் ஓதுகிறவர்களுக்கு
த்வேத்வே	இரண்டிரண்டு மயிர்கள்
க்ஞேயே	அறியத்தக்கவைகள்
த்ரியாத்யை:	மூன்று தொடங்கியுள்ளமயிர்களால்
மாநவா:	மனிதர்கள்
நிஸ்வா:	தரித்திரரும்
துக்கப்பாஜ:	துக்கத்தை அடைந்தவர்களும்
(பவந்தி:	ஆகின்றனர்.)
கேசாஸ்ச	தலைமயிர்களும்
ஏவம்	இவ்விதமாக
நிந்திதா:	நிந்திக்கப்பட்டவைகளும்
பூஜிதாஸ்ச	புகழப்பட்டவைகளுமாக
(பவந்தி:	ஆகின்றன.)

(பொ-ளா) சரீரத்திலுள்ள ரோமகூபங்களென்னும் மயிர்க்கால்களில் அரசர்களுக்கு ஒவ்வொருமயிரும், பண்டிதர்களுக்கு இரண்டிரண்டு மயிர்களாகவும் உண்டாகின்றன. மூன்று முதலாக ஒரு ரோமகூபத்தில் நான்கு, ஐந்து இவ்விதமாக உண்டாகில் அம்மனிதர் வறுமை யுடையார்களாகிப் பெருந்துன்பத்தையே அடைவார்கள். இதுபோலவே தலையிலுண்டாகும் மயிர் விஷயத்திலும், நிந்திக்கப்பட்டமயிர்களும், சிறந்தமயிர்களும் காணத்தக்கவையாம்.

Kings have a single hair growing from each hair-follicle over the body, learned people have two; if there are three and more

hairs springing from each follicle he will be in want and ever experience great misery. The same remarks apply to the hair on the head. There may also be found all these varieties in a single individual. (5)

శ్లో॥ నిర్మాంసజానుర్మ్రియతే ప్రవాసేసౌభాగ్య మల్పై ర్వికటైర్దరిద్రాః।
స్త్రీనిర్జితాశ్చాపి భవంతినిమ్నై రాజ్యంస మాంసైశ్చ మహద్భిరాయుః॥ ౬ ॥

(சு-ம் ; நிர்மாம்ஸ ஜாநுர் ம்ருயதே ப்ரவாஸே ஸௌபாக்ய மல்பைர் விகடைர்தரித்ரா: ஸ்த்ரீநிர்ஜிதாஸ்சாபி பவந்தி நிம்னை: ராஜ்யம் ஸமாம்ஸை ஸ்சமஹத்பிராயு:

பதம்.	பொருள்.
நிர்மாம்ஸ	மாம்சமில்லாததான
ஜாநு:	முழங்காலை யுடையவன்
ப்ரவாஸே	யாத்திரையில்
ம்ருயதே	மரிக்கிறான்
அல்பை:	சிறிய முழங்கால்களால்
ஸௌபாக்கியம்	நல்ல பாக்கியத்தைப் பெற்றிருக்கை யானது
(பவதி	ஆகிறது)
விகடை:	அகன்ற முழங்கால்களால்
தரித்ரா:	தரித்திரர்களாகவும்
நிம்னை:	பள்ளமாயிருக்கிறவைகளால்
ஸ்த்ரீநிர்ஜிதா	ஸ்திரீகளால் ஜெயிக்கப் பட்டவர்களாகவும்
பவந்தி	ஆகின்றனர்
ஸமாம்ஸை	மாம்சத்தோடு கூடியவைகளால்
ராஜ்யம்	ராஜ்யமானது
பவேத்	உண்டாகும்
மஹத்பி:	பருத்திருப்பவைகளால்
ஆயு:	தீர்க்காயுளானது
(பவேத்	உண்டாகும்)

(பொ-ள) மாம்ஸமில்லாம லுலர்ந்திருக்கிற முழந்தாள்களை யுடையான் தேசாந்தரயாத்திரையில் மரிக்கிறான். சிறியமுழந்தாள்களால் பாக்கியமும் அல்லது பலருக்கு நல்லவனாயிருக்கையும், அகன்றிருப்பவைகளால் தாரித்திரியமும், பள்ளமாயிருக்கில் ஸ்திரீகளுக்கு வசனாகி, அவர்கள் சொற்படி

நடக்குந்தன்மையும், மாம்ஸங்களுள்ள வைகளால் ராஜ்ஜியமும் பருத்துயர்ந் தவைகளால் ஆயுளு முண்டாகின்றன.

If the knees are dry and not covered with flesh, he will meet death in travelling through countries ; if the knees are small he will be happy or popular ; if they are broad, he will be poor; if they are sunk, he will be under the control of women ; if they are covered with flesh he will be king ; if they are large and raised he will live long. (6)

శ్లో॥ లింగేల్పేధనవాన పత్యరహిత స్థూలేవిహీనోధనై ర్మేఢ్రేవామనతేసు
తార్థరహితో వక్రేన్యథాపుత్రవాన్। దారిద్ర్యం వినతేత్వధోల్పతనయో లింగే
శిరాసంతతే స్థూలగ్రంథియుతేసుఖీమృదుకరోత్యంతం ప్రమేహాదిభిః॥ ౭ ॥

(சு-ம்) லிங்கேல்பே த்நவா நபத்ய ரஹித ஸ்தூலே விஹீநோதநை மேட்ரே வாமநதேஸுதார்த்த ரஹிதோ-வக்ரேந்யதா புத்ரவான்—தாரித்ரியம் விநதே த்வதோல்ப தநயோ லிங்கேஸிரா ஸந்ததே ஸ்தூலக்ரந்தியுதே ஸுகீம்ருது கரோத்யந்தம் ப்ரமேஹாதிபி:

பதம்.	பொருள்.
லிங்கே	ஆண்குறியானது
அல்பே	சிறிதாயிருக்கில்
தநவான்	அதிசயித்த தனமுடையவனும்
ஸ்தூலே	பருத்திருக்கில்
அபத்யரஹித:	பிள்ளையில்லாதவனும்
மேட்ரே	லிங்கமானது
வாமநதே	இடதுபக்கத்தில் வணங்கியிருக்கில்
தநை	தனங்களால்
விஹீந:	குறைந்தவனாகவும்
(பவதி	ஆகிறான்)
வக்ரே	கோணியிருக்கில்
ஸுதா	பிள்ளை
அர்த்த	தனம் இவைகள்
ரஹித:	இல்லாதவனாகவும்
அந்யதா	அப்படிகோணியிராதபக்ஷத்தில்
புத்ரவான்	புத்திரனையுடையவனுமாக
(பவதி	ஆகிறான்)
அத:	அதோமுகமாக

விநதே	வணங்கியிருக்கில்
தாரித்ரியம்	வறுமையானது
(பவதி	உண்டாகிறது)
லிங்கே	லிங்கமானது
ஸிரா	நரம்புகளால்
ஸந்ததே	வியாபித்திருக்கில்
அல்பதநய:	அல்பபுத்திரரையுடையவனுவன்
ஸ்தூல	பருத்திருக்கிற
க்ரந்தி	முடிபோன்றநுனியுடனே
யுதே	கூடியிருக்கில்
சுகி	சுகத்தையுடையவனுவன்
ம்ருது	மெதுவாகிய (லிங்கமானது)
ப்ரமேஹாதிபி:	மேகரோக முதலியநோய்களால்
(பும்ஸ:	புருஷனுக்கு)
அந்தம்	முடிவை
கரோதி	செய்கிறது.

(பொ-ரை) சிறிதான ஆண்குறியையுடையபுருஷன் தனவானும் பருத்த ஆண் குறியை யுடையவன் புத்திரனில்லாதவனுமாகிறான். இடது பக்கத்தில் வணங்கியிருக்கில் (சாய்ந்திருக்கில்) தனமில்லாதவனும், கோணியிருக்கில், புத்திரன், செல்வம், இவைகளை யொழிந்தவனும், கோணியிராதபக்ஷத்தில் புத்திரனையுடையவனும், அதோமுகமாக வணங்கியிருக்கில் வறுமையுடையவனும், நரம்புகளால் நிரம்பியிருக்கில் அல்பபுத்திரனும், லிங்கத்தின் நுனியின் முடியானது ஸ்தூலமாயிருக்கில் மிகுந்த சுகத்தை யுடையவனுமாகிறான். லிங்கம் மெதுவாயிருக்கில், நீரிழிவு, ரோகமுதலிய வியாதிகளால் புருஷனுக்கு நாசம் சம்பவிக்கும்.

Penis.

If the penis be small he will be rich; if large he will have no sons. If the penis be bent towards the left, he will not be wealthy; if it be crooked he will have neither wealth nor sons; if it is not crooked he will have sons; if it points to the ground he will suffer want, if it is covered with muscles and blood vessels, he will have very few sons; if the glans penis be large he will be in comfort; if it is soft he will die of diabetes, skin affections or some such deseases. (7)

శ్లో॥ కోశనిగూఢై ర్భూపాః దీర్ఘై ర్భగ్నైశ్చ విత్తపరిహీనాః ।
ఋజువృత్త శేఫసో లఘుశిరాల శిశ్నాశ్చ ధనవంతః ॥ ॥ ౮ ॥

(சு-ம்.) கோமஸிகூடைர் பூபா:தீர்க்கைர் பக்நைஸ்ச வித்த பரிஹீநா: ருஜுவிருத்த ஸேபஸோலகு ஸிரால ஸிஸ்நாஸ்சதநவந்த:

பதம்.	பொருள்.
கோமஸிகூடை	கோமத்தில் மறைந்த லிங்கங்களால்
பூபா:	அரசர்களாகவும்
தீர்க்கை:	நீண்டவைகளும்
பக்நைஸ்ச	வணங்கினவைகளுமான லிங்கங்களால்
வித்த பரிஹீநா:	தனமில்லாதவர்களும்
ருஜு	கோணியிராமலும்
விருத்த	உருண்டு மிருக்கிற
ஸேபஸ:	லிங்கத்தையுடையார்களும்
லகு	சிறியதாகி
ஸிரால	நரம்புகளையுடையதான
ஸிஸ்நாஸ்ச	லிங்கத்தையுடையவர்களும்
தநவந்த:	தனவான்களுமாக
(புவந்தி	ஆகின்றனர்).

(பொ-ரை.) கத்தியுறைபோன்ற மேல்தோலி லடங்கி மறைந்த லிங்கத்தையுடைய புருஷர்கள் அரசர்களாகவும், நீண்டும் வணங்கியுமிருப்பவைகளால் தரித்திரர்களாகவும், ருஜுவாகி உருண்டைவடிவாக யிருப்பதும் அல்லது சிறியதாக நரம்புகளையுடைய்து மான லிங்கத்தை யுடையார்கள் மஹாதனிகர்களாகவும் ஆகின்றனர்.

If the foreskin covers the glans penis like the sheath of a sword, he will be a king; if the penis is long and inclined he will live poor; if it is straight and round or small and covered with (visible blood vessels) he will be rich. (8)

శ్లో॥ జలమృత్యురేక వృషణః విషమైః స్త్రీచంచలస్సమైః క్షితిపః ।
హ్రస్వాయుశ్చోద్బద్ధైః ప్రలంబవృషణ స్యశతమాయుః ॥ ॥ ౯ ॥

(சு-ம்) ஜலமிருத்யு ரேகவ்ருஷண: விஷமை ஸ்த்ரீ சஞ்சலஸ்ஸமை; க்ஷிதிப:
ஹ்ரஸ்வாயுஸ் சோத்பத்தை: ப்ரலம்ப வ்ருஷணஸ்ய ஸதமாயு:

பதம்.	பொருள்.
ஏகவ்ருஷண:	ஒற்றைபீஜத்தையுடைய புருஷன்
ஜலமிருத்யு:	ஜலத்தில் மரிப்பவனாகவும்
விஷமை:	ஒன்றோடொன்று சரியாகாத பீஜங்களால்
ஸ்த்ரீசஞ்சல:	ஸ்திரீசாபல்ய முடையவனாகவும்
ஸமை:	ஒன்றோடொன்று சரியாயிருக்கிற பீஜங்களால்
க்ஷிதிப:	அரசனாகவும்
உத்பத்தை:	மேலிழுத்துக்கொண்ட பீஜங்களால்
ஹ்ரஸ்வாயு:	அல்பாயுளாகவும்
(பவதி	ஆகிறான்)
ப்ரலம்ப	தொங்குகிற
வ்ருஷணஸ்ய	பீஜத்தையுடைய புருஷனுக்கு
ஆயு:	ஆயுளானது
சதம்	நூறு.

(பொ-ரை.) ஒரு பீஜத்தையுடைய புருஷன் ஜலத்தில் மரிப்பவனாகவும் ஒன்றோடொன்று சரியாகாத விஷமபீஜங்களால் ஸ்திரீசபலனாகவும் ஏற்றக்குறை வுகளின்றி ஸமபீஜனானவன் அரசனாகவும், மேலிழுத்துக் கொண்டது போன்ற பீஜத்தையுடையவன் அல்பாயுஸ்ஸாகவும், தொங்குகிற விருஷணத்தையுடையவன் சதாயுஸ்ஸையுடையவனு மாகின்றான்.

Testes,

One with a single testes will meet death by drowning ; if the two testes be unlike he will be fond of sexual pleasures ; if both be alike (of the same size) will be a King ; if they are raised in position he will not live long ; if they are suspended low, he will live for a century. (9)

శ్లో॥ రక్తైరాఢ్యామణి భిర్నిర్ధ్రవ్యాః పాండురైశ్చ।
మలినైశ్చ సుఖినస్సీశబ్దమూత్రాః నిస్వానిశ్శబ్దధారాశ్చ॥ ॥ ౧౦ ।

(சு-ம்.) ரக்தை ராட்யாமணிபிர் நிர்த்ரவ்யா: பாண்டுரயிஶ்ச மலிநைஶ்ச சுகி நஸ்ஸஶப்தமூத்ரா: நிஸ்வா நிஸ்ஸப்த தாராஶ்ச.

பதம்.	பொருள்.
ரக்தை	சிவந்திருக்கிற
மணிபி:	மணிகளால்

ஆட்யா:	தனவான்களாகவும்
பாண்டுரயி:	வெளுத்தும்
மலினைஃச:	கறுத்துமிருக்கிற மணிகளால்
நிர்த்ரவ்யா:	திரவியம் இல்லாதவர்களாகவும்
ஸஃப்தமூத்ரா:	சப்தத்தோடுகூடின மூத்திரத்தை யுடையவர்கள்
சுகிந:	சுகிகளாகவும்
நிஸ்ஸப்த	ஓசையற்றிருக்கிற
த்ரார:	மூத்திரத்தாரையையுடையவர்கள்
நிஸ்வாஃஸ்ச	தரித்திரர்களாகவும்.
(பவந்தி	ஆகின்றனர்.)

(பெர்-ரை.) சிவந்தமணிகளோடு கூடினவர் தனிகர்களாகவும் வெளுத்தமணிகளாலும், கறுத்தமணிகளாலும், தரித்திரர்களாகவும் சப்தத்தோடுகூடி விழுகிற மூத்திர தாரையுடையார்கள் சுகிகளாகவும், சப்தமின்றி மூத்திரத்தைவிடுகிறவர்கள் தரித்திரர்களுமாகின்றனர்

இங்கு (மணி) என்பது லிங்கத்தின் நுனி முடியின் உள்பாகம்.

Urine.

If the urinary orifice be red he will be rich : if white or black he will live poor ; if the urine from the urithra flows with some sound, he will live in comfort ; if it flows silently he will be poor.

శ్లో॥ ద్విత్రిచతుర్ధారాభిః ప్రదక్షిణా వర్తవలితమూత్రాభిః।
పృథ్వీపతయోజ్ఞేయావికీర్ణమూత్రాశ్చ ధనహీనాః ॥ ॥ ౧౧ ॥

(சு-ம்) த்வித்ரி சதுர்த்தாராபி: ப்ரதக்ஷிணாவர்த்த வலிதமூத்ராபி: ப்ருத்வீ பதயோக்ஞேயா விகீர்ண மூத்ராஃச தாஹீநா:

பதம்.	பொருள்.
ப்ரதக்ஷிண	பிரதக்ஷிணமான
ஆவர்த்த	சுழலால்
வலித	திரும்புகிற
மூத்ராபி:	மூத்திரதத்தையுடையவைகளான
த்வித்ரி சதுர்த்தாராபி:	இரண்டு, மூன்று, நான்குகளான் தாரைகளால்
ப்ருத்விபதய:	அரசர்களாக

க்ஞேயா:	அறியத்தக்கவர்கள்
விகீர்ண	இடையில்நின்று, நின்றுவிழுகிற
மூத்ரா:	மூத்திரத்தையுடையார்கள்
தனயீனு:	தரித்திரர்
(பவந்தி)	(ஆகின்றனர்)

(பொ-ரை) ஜல விஸர்ஜனம் செய்கையில் ஒரேதாரையாகிவிழாமல் இரண்டு, மூன்று அல்லது நான்கு தாரைகளாகப் பிரிந்தும் பிரதக்ஷிணமாகச் சுழன்றுவருகிறது மான மூத்திரத்தோடு கூடியவர்கள் அரசர்களாகவும், சிதறியும், இடையில் நின்று, நின்று விழுகிற மூத்திரத்தை யுடையார்கள் தரித்திரருமாகவும் அறியத்தக்கவர்கள்.

If in the urinary discharge the urine flows not in a single stream but in two three or four streams all whirling from the left to right, he will be a king; if it is scattered in its flow and broken in its course he will be poor. (11)

శ్లో॥ ఏకైవమూత్ర ధారావలితారూప ప్రధానసుతదాత్రీ।
స్నిగ్ధోన్నత సమమణయో ధనవనితారత్నభోక్తారః॥ ॥ ౧౨ ॥

(சு-ம்.) ஏகைவ மூத்ரதாராவலிதா ரூப ப்ரதான சுததாத்ரீ ஸ்நிக்தோந்நத ஸமமணயோ தனவநிதா ரத்ந போக்தார:.

பதம்.	பொருள்.
வலிதா	சுழன்றுவருகிறதும்
ஏகைவ	ஒன்றாகவிருக்கிற
மூத்ரதாரா	மூத்திரதாரையானது
ரூப	அழகை
ப்ரதான	முக்கியமாகவுடைய
சுத	புத்திரனை
தாத்ரி	தருகிறதாக
(பவதி	ஆகிறது)
ஸ்நிக்த	நிகநிகப்புடையதும்
உந்நத	உயர்ந்ததும்
ஸம	சரியாயுமிருக்கிற
மணய:	மணியையுடையார்கள்
தன	தனம்
வநிதா	உத்தமஸ்திரி

ரத்நாநே	ரத்தினங்கள் (இவைகளை)
போக்தார:	அநுபவிப்பவர்களாக
(பவந்தி	ஆகின்றனர்.)

(பெ-ரை) ஜலவிசர்ஜனம் செய்கையில் சுழன்றுவருகிற ஒரு மூத்திர தாரையானது ரூபத்தில் சிறந்த மைந்தனைத் தருவதாகும். அழகியதும், நிக நிகப்புள்ளதும் உயர்ந்ததும், ஸமமாகியும் இருக்கிறமணியை யுடைய புருஷர்கள் செல்வம், உத்தமஸ்திரீகள், இரத்தினங்கள்ஆகிய இவைகளை அனுபவித்து வாழ்வார்கள்.

If the urine flow in a single stream twisted, he will have a worthy son; if the glans penis be pretty, glossy raised and even, he will enjoy wealth, virtuous women and possess gems. (12)

శ్లో॥ మణిభిశ్చమధ్యనిమ్నైః కన్యాపితరో భవంతినిస్వాశ్చ।
బహుపశు భాజోమధ్యోన్నతైశ్చ నాత్యుల్బణైర్ధనినః॥ ॥ ౧౩ ॥

(சு-ம்) மணிபிஶ்ச மத்யநிம்நை: கந்யாபிதரோ பவந்தி நிஸ்வாஶ்ச பஹு. பஶுபாஜோ மத்யோந்நதைஶ்ச நாத்யுல்பணைர்தனிந:

பதம்.	பொருள்.
மத்ய	நடுவில்
நிம்நை:	பள்ளமான
மணிபி:	மணிகளால்
(உபலக்ஷிதா:	கூடினவர்கள்)
கந்யாபிதரா:	பெண்களைப்பெறுகிறவர்களும்
நிஸ்வாஶ்ச	தரித்திரருமாக
பவந்தி	ஆகிறார்கள்
மத்யோந்நதை	நடுவில் உயர்ந்திருக்கிற (மணிகளால்)
பஹு	அதிகமான
பஶு	பசுக்களை
பாஜா:	அடைந்தவர்களும்
நாத்யுல்பணை:	அதிகமாக உயர்ந்திராத மணிகளால்
தனிகாஶ்ச	தனவான்களுமாக
பவந்தி	ஆகின்றனர்.

நடுவில் பள்ளமுடைய மணிகளோடு கூடினவர்கள் கன்னிகைகளைப் பெறுகிறவர்களும், தரித்திரருமாகின்றனர். நடுவில் உயர்ந்த மணிகளோடு

கூடியவர்கள், வெகு பசுக்களையுடையாரும், நடுவில் மிகவும் உயர்ந்தவையா காத (சற்று உயர்ந்த) மணிகளோடு கூடியவர் தனிகருமாகின்றனர்

If there be a depression in the middle of the glans-penis he will have daughters and live poor; if there is a protruberance in the same position he will possess great many cows; if the protruberance be of the moderate elevation he will be wealthy. (13)

పరిశుష్కవస్తి శీర్షైద్ధనరహితా దుర్భగాశ్చ విజ్ఞేయాః। కుసుమసమసుగంధ శుక్రా
విజ్ఞాతవ్యామహీపాలాః ॥ ॥ ౧౪ ॥

(சு-ம்.) பரிசுஷ்க வஸ்தி சீர்ஷை தநரஹிதா துர்ப்ப காஶ்ச விக்ஞேயா: குசுமஸம சுகந்த ஶுக்ரா விக்ஞாதவ்யாமஹீ பாலா:.

பதம்.	பொருள்.
பரிசுஷ்க	நன்றாக உலர்ந்திருக்கிற
வஸ்தி சீர்ஷை:	மூத்திரத்துவாரங்களால்
தநரஹிதா:	செல்வமில்லாதவர்களாகவும்
துர்ப்பகாஶ்ச	குரூபிகளுமாக
விக்ஞேயா:	அறியத்தக்கவர்கள்
குசுமா	புஷ்பத்தோடு
ஸம	சரியான
சுகந்த	பரிமளத்தையுடையதான
சுக்ரா:	சுக்கிலத்தையுடையவர்கள்
மஹீபாலா:	அரசர்களாக
விக்ஞாதவ்யா	அறியத்தக்கவர்கள்

(பொ-ள.) மாம்ஸமின்றியே உலர்ந்திருக்கிற மூத்திரத்துவாரத்தையுடைய புருஷர்கள் செல்வமில்லாதவர்களும் குரூபிகளுமாக அறியத்தக்கவர்கள். புஷ்பம்போல் மிகுந்த பரிமளத்தைப் பெற்ற சுக்கிலமுடைய புருஷர்கள் அரசர்களாக அறியத்தக்கவர்கள்.

Semen.

If the lower part of the glans penis be not fleshy or the urinary orifice dry, he will be poor and ugly. If the semen be highly scented like a flower, he will be a king. (14)

మధుగంధేబహువిత్తాః మత్స్యసగంధే బహూన్యపత్యాని । తనుశుక్రస్త్రీజనకో మాంససగంధో మహాభోగీ ॥ ॥ ౧౫ ॥

(சு-ம்) மதுகந்தே பஹுவித்தா: மத்ஸியஸகந்தே பஹூந்யபத்யாநி-தநுசுக்ரஸ்த்ரீஜநகோ மாம்ஸ ஸகந்தோ மஹாபோகீ.

பதம்.	பொருள்.
(சுக்லே	சுக்லமானது)
மதுக்ந்தே	தேன்மணமுடையதாயிருக்கில்
பஹுவித்தோ	வெகுதனிகர்கள்
மத்ஸ்யஸகந்தே	மீன்மணத்தை யொத்தமணத்தை பெற்றிருக்கில்
பஹுநி	அநேகம்
அபத்யாநி	பிள்ளைகள்
பவந்தி	உண்டாகின்றன
தநு	தடிப்பில்லாததான
சுக்ர	சுக்கிலத்தையுடையவன்
ஸ்த்ரீஜனக:	பெண்களைப் பெறுகிறவனாகவும்
மாம்ஸ	மாம்ஸத்தோடு
ஸகந்த:	சரியானமணமுடைய சுக்கிலத்தைஉடையவன்
மஹாபோகி	மிகுந்தபோகத்தை உடையவனுமாக
(பவதி	ஆகிறான்)

(பொ-ள) சுக்கிலத்தில் தேன் மணமிருக்கில் புருஷன் மிகுந்த செல்வமுடையவன். சுக்கிலத்தில் மத்ஸ்யமணமுண்டாகில் அவன்வெகு புத்திரரைப்பெறுவான். சுக்கிலம் அல்பமாயிருக்கில் அல்லது தடிப்பில்லாததாயிருக்கில்பெண்களே பெருவான். மாம்சமணம் வீசுகிற சுக்கிலமுடையவன் மஹாபோகியாகிறான்.

If the semen has the smell fo honey; he will be very wealthy; if it has the smell of fish, he will have many sons; if it is thin or watery, he will have female issues; if it has the smell of flesh, he will be in great comfort. (15)

మదిరాగంధే యజ్వాక్షారసగంధే చరేతసిదరిద్రః । శీఘ్రంమైథునగామీ దీర్ఘాయురతోన్య థాల్పాయుః ॥ ॥ ౧౬ ॥

(சு-ம்) மதிராகந்தே யஜ்வா க்ஷாரஸகந்தே சரேத ஸ்திரித்ர: சீக்ரம் மைதுந காமீ தீர்க்காயு ரதோந்யதா: ல்பாயு:

பதம்.	பொருள்.
ரேதஸி	சுக்கிலமானது
மதிராகந்தே	மத்ஸ்யத்தின் மணத்தையொத்த மணம் பெற்றிருக்கில்
யஜ்வா	விதிப்படியாகம் செய்கிறவனாகவும்
க்ஷாரா	உப்போடு
ஸகந்தே	சமமானமணத்தையுடையதாயிருக்கில்
தரித்ரஸ்ச	தரித்திரனாகவும்
(பவதி	ஆகிறான்)
சீக்ரம்	விரைவாக
மைதுனகாமி	புணருகிறவன்
தீர்க்காயு:	தீர்க்காயுளை யுடையவனாகவும்
அத:	இவனைப்பார்க்கிலும்
அந்யதா	வேறுவிதமானவன் (நெடுங்காலம்புணருகிறவன்)
அல்பாயு:	அல்பமான ஆயுளையுடையவனுமாக
(பவதி	ஆகிறான்.)

(பொ-ரை) சுக்கிலத்தில் மத்சியத்தின் மணம் வீசினால் அந்தபுருஷன் விதிப்படியாகம் செய்கிறவனாகிறான். உப்பு மணமுண்டாகில் தரித்திரனாகிறான். சீக்கிரமாக மைதுனத்தைச் செய்கிறவன் (விரைவில் சுக்கிலத்தைவிடுகிறவன்) தீர்க்காயுசையுடையவனாகவும் அப்படிக் கில்லாமல் நெடுங்காலம் புணர்ந்து சுக்கிலத்தைவிடுகிறவன் அல்பாயசுள்ளவனுமாகிறான்.

If the semen smells like alcohol, he will perform (yakha) ceremonies of sacrificial fire; if it has the smell of salt, he will be poor; one whose sexual intercourse lasts for a short time (who emits semen soon) will live long; if it lasts for a long time he will die early. (16)

౧౭ నిస్స్వోతి స్థూలిస్ఫిక్ సమాంసలస్ఫిక్ సుఖాన్వితో భవతి। వ్యాఘ్రాన్తో ర్ధ్వస్ఫిక్ మండూక స్ఫిఙ్నరాధిపతిః ॥ ॥ ౧౭ ॥

(சு-ம்) நிஸ்ஸ்வோதி ஸ்தூலி ஸ்பிக் ஸமாம் ஸலஸ்பிக் ஸுகாந்விதோ பவதி வாத்யார்த்தோ த்யர்த்த ஸ்பிக் மண்டூக ஸ்பிங்நராதிபதி:

பதம்.	பொருள்.
அதிஸ்தூல	மிகவும் ஸ்தூலமாகிய
ஸ்பிக்	பிருஷ்டபாகத்தின் அடியை அல்லது முதுகெலும்பின் முனையையுடையவன்
நிஸ்வா:	தரித்திரனுகவும்
ஸமாம்ஸ லஸ்பிக்	சதைபருத்த பிருஷ்டத்தின் அடியோடு கூடினவன்
சுகாந்வித:	சுகத்தோடு கூடினவனுகவும்
அத்யர்த்தஸ்பிக்	பாதி அளவையுடைய பிருஷ்டத்தையுடையவன்
வியாத்யார்த்த:	நோயால் பீடிக்கப்பட்டவனுகவும்
மண்டூகஸ்பிக்	தவளையின் பிருஷ்டத்தைப்போன்ற பிருஷ்டத்தையுடையவன்
நராதிபதி	அரசனுகவும்
பவதி	ஆகிருன்.

(பொ-ரை.) மிகவும் பருத்து ஸ்தூலமாகிய ஸ்பிக்கென்னும் பிருஷ்டத்தை அல்லது முதுகெலும்பின் முனையையுடையவன் தரித்திரனுகவும், சதைபிருத்த பிருஷ்டத்தை யுடைய புருஷன் சுகத்தோடு கூடினவனுகவும், பாதி அளவுடைய பிருஷ்டத்தை யுடையவன் வியாதியினுல் பீடிக்கப்படுகிற வனுகவும், தவளையின் பிருஷ்டம் போன்ற பிருஷ்டத்தை யுடையவன் அரசனுகவும் ஆகிருன்.

Buttocks

If the buttocks are very large or if the lower end of the spinal column be prominent he will be poor; if the buttocks are very fleshy he will live in comfort; if they are half the ordinary size he will always be afflicted with disease; if they are like those of the frog he will be a king. 17

శ్లో॥ సింహాకటిర్మనుజేంద్రః కపికరభకటిర్ధనైః పరిత్యక్తః ।
సమజఠరాభోగయుతా ఘటపిఠరనిభోదరానిస్స్వాః ॥ ॥ ౧౮ ॥

(சு-ம்) ஸிம்ஹகடிர் மநுஜேந்த்ர: கபிகரப கடிர்தனை: பரித்யக்த: - ஸமஜடரா போகயுதா கடபிடரநிபோதரா நிஸ்ஸ்வா:

பதம்.	பொருள்.
ஸிம்ஹகடிர்	சிங்கத்தின் இடைபோன்ற இடையையுடையவன்
மனுஜேந்த்ர:	அரசனுவான்

கபி	குரங்கு
சரப	ஒட்டகம் இவைகளுடைய
கடி:	இடைபோன்ற இடையையுடையவன்
தனை:	தனங்களால்
பரித்யக்த:	விடப்பட்டவன்
ஸமஜடரா:	(மேடு பள்ள மின்றி) சமமான அடிவயிற்றையுடையார்கள்
போகயுதா:	சுகத்தோடு கூடினவர்கள்
கட	குடம்
பிடர	சிறியகுடம் இவைகளோடு
நிப	சரியான
உதரா:	வயிற்றையுடையார்கள்
நிஸ்வா:	ஏழைகள்

(பொ-ரை) சிம்மத்தின் இடுப்பைப்போன்ற சிறந்த இடுப்பையுடைய புருஷன் அரசனும், குரங்கு அல்லது ஒட்டகம் இவைகளுடைய இடுப்பைப் போன்ற இடுப்பை யுடைய புருஷன்தரித்திரனுமாகிறான். மேடுபள்ளமின்றி சமமான வயிற்றையுடையார்கள் சுகத்தோடு கூடினவர்களும், பெரியகுடம் போலும்,சிறியபானை போலும் வயிற்றையுடையார்கள் தரித்திரருமாகின்றனர்.

Waist.

If the waist is like that of a lion he will be a king; if his waist is like that of a monkey or a camel he will be poor; if the belly is even (without elevations and depressions) he will be in comfort; if it is convex like a pot he will be poor. (18)

శ్లో॥ అవికలపార్శ్వా ధనినో నిమ్నైర్వక్రైశ్చ భోగసంత్యక్తాః ।
సమకుక్షా భోగాఢ్యా నిమ్నాభిర్భోగపరిహీనాః ॥ ॥౧౯॥

(சு-ம்) அவிகலபார்ஸ்வா தநிநோ நிம்னைர்வக்ரைஸ்சபோக சந்த்யக்தா: - ஸமகுக்ஷா போகாட்யா நிம் நாபிர் போகபரிஹீநா:

பதம்.	பொருள்.
அவிகல	குறைவின்றியிருக்கிற
பார்ஸ்வா:	பக்கங்களையுடையவர்கள்
தநிந:	தனிகர்கள்
நிம்னை:	பள்ளமாயும்

வக்ஷா:	கோணியுமிருப்பவைகளுமானபாரிசங்களால்
போகாஸ்த்யக்தா:	போகத்தினால் விடப்பட்டவர்களாகவும்
ஸமகுக்ஷா:	மேடு பள்ளமில்லாதவயிற்றை யுடையவர்கள்
போகாட்யா:	போகத்தினால் நிறைந்தவர்களாகவும்
நிம்நாபி:	ஆழ்ந்தவயிறுகளால்
போகபரிஹீநா:	சுகயீனர்களாகவும்
(பவந்தி	ஆகின்றனர்).

(பொ-ள்) குறைவில்லாமல் பரிபூரணமான பாரிசங்களையுடைய புருஷர் அதிசயித்த செல்வமுடையார்களும்; பள்ளமுடையவையும், கோணியுமிருக்கின்ற பாரிசங்களைப் பெற்றவர்கள் சுகஈனர்களாகவும் ஆகின்றனர். மேடு பள்ளமின்றி சமமாகியவயிற்றையுடையார்கள். போகத்தினால் நிறைந்தவர்களாகவும், ஆழ்ந்த வயிற்றை யுடையவர்கள் போக ஈனருமாகின்றனர்.

Belly.

If the lateral parts of the trunk are not defective, he will be amazingly wealthy ; if they are bent and bear depressions, he will have no enjoyment ; if the belly is even he will live in great wealth and comfort, if it is depressed and low, he will be wanting in comfort. (19)

శ్లో॥ ఉన్నతకుక్షాః క్షితిపాః కుటిలాస్స్యుర్మానవావిషమకుక్షాః।
సర్పోదరాదరిద్రాభవంతి బహ్వాశినశ్చైవ ॥ ॥ ౨౦ ॥

(சு-ம்) உந்நதகுக்ஷா: க்ஷிதிபா: குடிலாஸ்ஸ்யுர் மாநவாவிஷ மகுக்ஷா: ஸர்ப்போதராதரித்ரா பவந்தி பஹ்வாஶிநஶ்சைவ.

பதம்.	பொருள்.
உந்நதகுக்ஷா:	உயர்ந்த மேல் வயிற்றையுடையார்கள்
க்ஷிதிபா:	அரசர்களாகவும்
விஷம	மேடுபள்ளமான
குக்ஷா:	வயிற்றை உடையவர்களான
மாநவா:	மனிதர்கள்
குடிலா:	வக்ரசுபாவத்தையுடையவர்களாகவும்
ஸ்யு:	அவர்கள்
ஸர்ப்போதரா:	பாம்பின் வயிற்றைப் போன்ற வயிற்றையுடையார்கள்

தரித்ரா:	தரித்திரரும்.
பஹ்வாஶிநஶ்ச	அதிகமாகபுசிப்பவருமாக
பவந்தி	ஆகின்றனர்.

(பொ - ரை) உயர்ந்த வயிற்றையுடையார்கள் அரசர்களாகவும், விஷமமாகி மேடு பள்ளமுடைய வயிற்றையுடையமனிதர் வக்கிரமான சுபாவமுள்ளவரும், பாம்பின் வயிறு போன்ற வயிற்றையுடையார்கள் தரித்திரரும் அதிகமாக புசிப்பவருமாகின்றனர்.

If the belly is raised. he will be a King; if it is uneven with depressions and elevations, he will be a man of perverted disposition; if it is like that of the serpent, he will be gluttonous and live in poverty. (20)

శ్లో॥ పరిమండలోన్నతాభిర్విస్తీర్ణాభిశ్చనాభిభిస్సుఖినః ।
స్వల్పాత్వస్పృశ్యనిమ్నానాభిః క్లేశావహాభవతి ॥ ॥ ౨౧ ॥

(சு-ம்) பரிமண்டலோந்நதாபிர் விஸ்திர்ணாபிஶ்ச நாபிபிஸ்ஸுகிந:—ஸ்வல்பாத் வத்ருஶ்ய நிம்நா நாபி: க்லேஶாவஹாபவதி.

பதம்.	பொருள்
பரிமண்டல	உருண்டும்
உந்நதாபி:	உயர்ந்ததும்
விஸ்திர்ணாபி:	அகன்று இருப்பவையுமான
நாபிபி:	தொப்புளோடு
(உபலக்ஷிதா:	கூடினவர்கள்)
ஸுகிந:	சுகிகள்
ஸ்வல்பா	சிறியதும்
அத்ருஶ்ய	காணத்தகாததும்
நிம்நா	பள்ளமுமாகிய
நாபி:	தொப்புளானது
க்லேஶாவஹா	துக்கத்தைத் தருவதாக
பவதி	ஆகிறது.

(பொ - ரை) உருண்டவடிவாகியும், உயர்ந்ததும், அகன்றமிருக்கிற தொப்புள் பிரதேசத்தோடு கூடியபுருஷர்கள் சுகிகளாகின்றனர் மிகச்சிறியதும் காணத்தகாத ஆழத்தையுடையதுமான நாபியானது மிகவும் கிலேசத்தைத்தருவதாகும்.

Navel.

If the navel is round, raised and broad, he will be in comfort in foreign countries; if it is small and set so low as not to be visible, he will be afflicted with grief. (21)

శ్లో॥ వలిమధ్యగతా విషమాశూలా బాధంకరోతినైస్స్వంచ ।
శాఠ్యంవామావర్తాః కరోతి మేధాంప్రదక్షిణతః ॥ ॥ ౨౨ ॥

(சு-ம்) வலிமத்யகதா விஷமா ஶூலாபாதம் கரோதி நைஸ்ஸ்வம்ச ஶாட்யம் வாமாவர்த்தா: கரோதிமேதாம் ப்ரதக்ஷிணத:.

பதம்.	பொருள்.
வலி	சதைமடிப்பினுடைய
மத்ய	நடுவை
கதா	அடைந்ததும்
விஷமா	சமமாகாததுமான (நாபியானது)
ஶூலா	சூலநோயினுடைய
ஆபாதம்	பீடையையும்
நைஸ்ஸ்வம்ச	வறுமையையும்
கரோதி	செய்கிறது
வாமாவர்த்தா	அப்பிரதக்ஷிணமாக சுழித்திருக்கிற(நாபியானது)
ஶாட்யம்	வஞ்சகராயிருக்கையும்
ப்ரதக்ஷிணத:	பிரதக்ஷிணமானசுழியினால்
மேதாம்	புத்தியையும்
கரோதி	செய்கிறது.

(பொ-ள) வயிற்று மேல்சதைமடிப்பின் நடுவேயிருந்ததும், அந்தமடிப்பினால் விஷமமாகியும் இருக்கிறநாபியானது புருஷனை சூலரோகத்தினால் வருந்தச் செய்தும், வறுமையும் தரவல்லது; நாபியானது அப்பிரதக்ஷிணமான சுழியையுடையதாகில் மோசத்தன்மையையும்; பிரதக்ஷிணச்சுழியைப்பெற்றிருக்கில் புத்தியையும் தருவதாம்.

If the navel be in the middle of a fold of skin over the belly and from this cause it is depressed he will suffer from belly-ache and live in poverty. If the navel turn from right to left he will be a cheat; if it turns from left to right, he will be a man of good sense. (22)

శ్లో॥ పార్శ్వాయతా చిరాయుష ముపరిష్టాచ్చేశ్వరం గవాఢ్యమధః ।
శతపత్రకర్ణికాభా నాభిర్మనుజేశ్వరం కురుతే ॥ ॥ ౨౩ ॥

(சு-ம்) பார்ஶ்வாயதா சிராயுஷ முபரிஷ்டாச்சேஶ்வரம் கவாட்யமத:-ஶத பத்ரகர்ணிகாபா நாபிர் மநுஜேஶ்வரம் குருதே.

பதம்,	பொருள்.
பார்ஶ்வா	பக்கத்தில்
ஆயதா	அகன்ற
(நாபி:	தொப்புளை உடையவன்)
சிராயுஷம்	தீர்க்காயுளையுடையவனாகவும்
உபரிஷ்டாத்	மேல்புறத்தில் அகன்ற நாபியானது
ஈஶ்வரஞ்சா	அரசராகவும்
அத:	கீழ்புறத்தில் அகன்றிருக்கிற நாபியானது
கவாட்டியம்	பசுக்களால் நிறைந்தவனாகவும்
ஶதபத்ர	தாமரையினுடைய
கர்ணிகா	காயினுடைய
ஆபௌ	காந்திபோன்ற காந்தியையுடைய
நாபி:	நாபியானது (புருஷனை)
மநுஜேஶ்வரம்	அரசனாக
குருதே	செய்கிறது

(பொ-ரை) பக்கங்களில் அகன்றிருக்கிற நாபியானது புருஷனை தீர்க்காயுசையுடையவனாகவும், மேல் புறத்தில் அகன்றிருக்கில் அரசனாகவும், கீழ்புறத்தில் அகன்றிருக்கில் பசுக்களால் நிறைந்தவனாகவும், தாமரைக்காய் போன்றதாகில் மஹாராஜனாகவும் செய்கிறது.

If the navel extend laterally, he will live long; if it extend upwards, he will be King; if it extend downwards, he will possess many cows; if it is like the fruit of the lotus, he will be a great King. (23)

శ్లో॥ శస్త్రాన్తం స్త్రీభోగినమాచర్యం బహుసుతం యథా సంఖ్యం ।
ఏకద్విత్రిచతుర్భిర్వలిభి ర్విద్యాన్నృపం త్వపరం ॥ ॥ ౨౪ ॥

(சு-ம்) ஶாஸ்திராந்தம் ஸ்த்ரீபோகிந மாசர்யம் பஹுஸுதம் யதா ஸங்க்யம் ஏகத்வித்ரி சதுர்ப்பிர்வலிபிர் வித்யாந்ருபம் த்வபரம்.

பதம்.	பொருள்.
ஏகத்வித்ரி சதுர்பி:	ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு
வலிபி:	சதை மடிப்புகளால்
யதாஸங்க்யம்	கணக்கின்படி
(புருஷம்	புருஷன்)
சஸ்திராந்தம்	ஆயுதத்தினுல் மரிப்பவனுகவும்
ஸ்த்ரீபோகிநம்	ஸ்திரீபோகத்தையுடையவனுகவும்
ஆசார்யம்	குருவாகவும்
பஹுஸுதம்	வெகுபுத்திரரையுடையவனுகவும்
அவலிம்	சதைமடிப்பில்லாதவனை
ந்ருபம்	அரசனுகவும்
வித்யாத்	அறியக்கடவன்.

(பொ - ரை) புருஷனுக்கு வயிற்றில் சதை மடிப்பு ஒன்றிருக்குமாகில் அவன் ஆயுதத்தினுல் மரிக்கிறவனுகிருன்; இரண்டிருக்கு மாகில் ஸ்திரீ போகத்தையுடையவனுகிருன், மூன்ருகில் குருவாகிருன், நான்கு மடிப்புகளிருக்கில் அநேகமாக பிள்ளைகளைப் பெறுவானென்றும், வலி என்னும் மடிப்புள்ளசதை இல்லாத மனிதன் அரசனுகின்ருனென்றும் அறியத்தக்கது.

Folds of skin across the Belly.

If there is a single fold of skin across the belly he will meet death by some weapon; if there are two folds, he will be a debauchee (enjoy women); if there are three he will be a priest (teacher); if four he will have many sons; if there are no folds at all he will be a king. (24)

శ్లో॥ విషమవలయోమనుష్యా భవంత్యగమ్యాభిగామినః పాపాః ।
ఋజువలయస్సుఖభాజః పరదారద్వేషిణశ్చైవ ॥ ॥ ౨౫ ॥

(சு-ம்) விஷமவலயோமநுஷ்யா பவந்த்யகம்யாபி காமிந: பாப்ா:- ருஜுவலயஸ் ஸுகபாஜ: பரதாரத்வேஷிணஶ்சைவ

பதம்.	பொருள்.
விஷம	கோணியிருக்கிற
வலய:	சதைமடிப்பைப் பெற்ற
மநுஷ்ய:	மனிதர்

அகம்யா	புணரத்தகாத மாதரை
அபிகாமிந:	சேருகின்றவரும்
பாபா:	பாபிகளுமாக
பவந்தி	ஆகின்றனர்
ருஜுவலய:	நேரானசதைமடிப்பை உள்ளவர்கள்
ஸுகபாஜ:	சுகத்தையடைந்தவர்களும்
பரதார	அயல்மாதரை
த்வேஷிண:	துவேஷிப்பவரும் (இச்சிக்காதவருமாக)
பவந்தி	ஆகின்றனர்.

(பொ-ரை) விஷமங்களாகி கோணியிருக்கின்ற சதை மடிப்பை யுடையார்கள் புணரத்தகாத மாதரை, சேரும் பாபிக ளாகின்றனர். நேரானசதை மடிப்பை யுடையார்கள் சுகிகளும், அயல்மாதரை துவேஷிப்பவர்களு மாகின்றனர்.

If the folds of skin be not straight but curved he will be an adulteror (have sexual intercourse with women under prohibition); if they are straight he will be in comfort and will never] covet the wives of other men. (25)

శ్లో॥ మాంసళైర్మృదుభిః పార్శ్వైః ప్రదక్షిణావర్తరోమభిర్భూపాః ।
విపరీతైర్నిర్ద్రవ్యాః సుఖపరిహీనాః పరప్రేష్యాః ॥ ॥ ౨౬ ॥

(சு-ம்) மாம்ஸள ம்ருதுபி: பார்ஸ்வ: ப்ரதக்ஷிணாவர்த்த ரோமபிர் பூபா: விபரீதைர் நிர்த்ரவ்யா: ஸுகபரிஹீநா: பரப்ரேஷ்யா:

பதம்.	பொருள்.
மாம்ஸள	சதைபருத்தும்
ம்ருதுபி:	மெதுவாகியும்
ப்ரதக்ஷிணாவர்த்த	பிரதக்ஷிணமானசுழியையுடைய
ரோமபி:	மயிர்களையுடையவையுமான
பார்ஸ்வ:	பக்கங்களோடு (கூடினவர்கள்)
பூபா:	அரசர்களாவர்
விபரீதை:	இதற்கு மாறுபட்ட பாரிசங்களோடு (கூடினவர்கள்)
ஸுகபரீஹீநா:	சுகமில்லாதவர்களும்
நிர்த்ரவ்யா:	திரவியமில்லாதவர்களும்
பரப்ரேஷ்யா:	அயலாருக்கு அடிமை செய்கிறவர்களுமாக
பவந்தி	ஆகின்றனர்.

(பொ-ரை) நன்றாகச் சதைபருத்து மெதுவாகி யிருப்பவையும், பிரதக்ஷிணமாகச் சுழித்திருக்கிற மயிர்களை உடையவையு மான பாரிசங்க ளோடு கூடிய புருஷர்கள் அரசர்களாகின்றனர். இதற்கு வேறாக சதையின்றி உலர்ந்து கரடாகி அப்பிரதக்ஷண மயிர்ச்சுழியை யுடைய பாரிசங்களோடு கூடின புருஷர்கள் திரவியம், சுகம், இவைகளில்லாமல், அயலாருக்கு அடிமை செய்வார்கள்.

If the sides be soft and covered with much flesh and if the hair growing over them whirl from the left to right he will be a king; if on the other hand they are not fleshy but dry and if the hair on them whirl from right to left he will be in want of health and comfort and serve others. (26)

శ్లో॥ సుభగాభవంత్యనుద్బద్ధచూచుకానిర్ధనా విషమదీర్ఘైః ।
పీనోపచితనిమగ్నైః క్షితిపతయశ్చూచుకైస్సుఖినః॥ ॥ ౨౭ ॥

(சு-ம்) ஸுபகா பவந்த்யநுத்பத்த சூசுகா நிர்த்தநா விஷம தீர்க்கை:- பீநோபசிதநிமக்நை: க்ஷிதிபதயஸ் சூசுகைஸ் ஸுகிந:

பதம்.	பொருள்.
அநுத்பத்த	உயர்ந்திராத
சூசுகா	முலைநுனியையுடையார்கள்
ஸுபகா:	பாக்கியமுடையார்களாக
பவந்தி	ஆகின்றனர்
விஷம	ஒன்றோடொன்று சரியாகாமல்
தீர்க்கை:	நீண்டவையுமான சூசுகங்களோடு (கூடியவர்கள்)
நிர்த்தநா:	தனமில்லாதவர்களும்
பீநோ	பருத்தும்
உபசித	வளர்ந்தும்
நிமக்நை:	அமிழ்ந்து மிருக்கிற
சூசுகை	முலைநுனிகளோடு (கூடியவர்கள்)
க்ஷிதிபதய:	அரசர்களாகவும்
ஸுகிந:	சுகிகளுமாக
பவந்தி	ஆகின்றனர்.

(பொ-ரை) மேலிழுத்துக் கொள்ளப்பட்டவைபோ லுயர்ந்த முகங்களாகாத சூசுகமென்னும் முலைநுனிகளோடு கூடினவர்கள் பாக்யவான்க

ளும், ஒன்றோடொன்று சரியாகாமல் கோணியும் நீண்டுமிருக்கிற மூலநுனிகளைப்பெற்றவர்கள் தரித்திரர்களாகவும், பருத்துயர்ந்து அமிழ்ந்திருக்கிற மூலநுனிகளை யுடையார்கள் அரசர்களாகி சுகத்தைப்பெறுகிறவர்களாகவும் ஆகின்றனர்.

Breast.

If the nipple of the breasts be elongated he will be happy If both are unlike crooked and long he will be poor; if they are large and elevated or deepset he will be a king and will live in comfort. (27)

శ్లో॥ హృదయంసమున్నతం పృథునవేపనం మాంసళంచనృపతీనాం ।
అధమానాంవిపరీతం ఖరరోమచితంశిరాలంచ ॥ ॥ ౨౮ ॥

(சு-ம்) ஹ்ருதயம் ஸமுந்நதம் ப்ருதுநவேபநம் மாம்ஸளஞ்சந்ருபதீனும்-அத மாநாம் விபரீதம் கரரோமசிதம் ஸிராலஞ்ச

பதம்.	பொருள்.
ந்ருபதீனும்	அரசர்களுடைய
ஹ்ருதயம்	மார்பானது
ஸமுந்நதம்	உயர்ந்தும்
ப்ருது	விசாலமானதும்
நவேபநம்	அசைவற்றுவுறுதியானதும்
மாம்ஸளஞ்ச	சதைபருத்ததுமாக
பவதி	ஆகிறது
அதமாநாம்	அதமர்களுடைய (இருதயமானது)
கர	குரூரங்களான
ரோமா	மயிர்களால்
சிதம்	வியாபித்ததும்
ஸிராலஞ்ச	நரம்புகளையுடையதுமாக
பவதி	ஆகிறது.

(பொ-ரை) மஹாராஜர்களுடைய மார்பானது உயர்ந்தகன்று பருத்து அசைவற்றிருக்கும். அதமர்களுடைய மார்பானது குரூரங்களான மயிர்களால் நிறைந்ததும் நரம்புகளால் வியாபித்ததுமாகக் காணப்படும்.

Chest.

If the chest be high broad and large and firm he will be a king; if it be covered with stiff hairs and be spread with (blood vessels) muscles, he will be wicked and mean. (28)

శ్లో॥ సమవక్షసోర్థవంతః పీనైశ్శూరా స్త్వకించనా స్తనుభిః ।
విషమం వక్షో యేషాంతే నిస్స్వాశ్శస్త్రనిధనాశ్చ ॥ ॥ ౨౯ ॥

(சு-ம்) ஸமவக்ஷ ஸோர்த்தவந்த: பீனைஶ் ஶூராஸ் த்வகிஞ்சநாஸ்தநுபி:
விஷமம் வக்ஷோ யேஷாந்தே நிஸ்வாஶ்ஶஸ்த்ர நிதநாஶ்ச

பதம்.	பொருள்.
ஸமவக்ஷஸ:	சரியான மார்பையுடையவர்கள்
அர்த்தவந்த:	தனவான்களாகவும்
பீனை:	பருத்தமார்புகளோடு (கூடியவர்கள்)
ஶூரா:	சூரர்களாகவும்
தநுபி:	குறுகியமார்புகளோடு கூடியவர்கள்
அகிஞ்சநா:	தரித்திரருமாக
(பவந்தி	ஆகின்றனர்)
யேஷாம்	எவர்களுடைய
வக்ஷ	மார்பானது
விஷமம்	மேடு பள்ளங்களைப் பெற்றதோ
தே	அவர்கள்
நிஸ்வா:	தரித்திரர்களாகவும்
ஶஸ்திர நிதநாஶ்ச	ஆயுதத்தினால் மரிக்கிறவர்களுமாக
பவந்தி	ஆகின்றனர்

(பொ-ரை) மேடுபள்ள மில்லாத சமமாகிய மார்பையுடையவர்களும் அதிசயித்த மார்பைப்பெற்றவர்களும் சூரர்களாகவும், குறுகியமார்போடு கூடியவர்கள் தரித்திரர்களுமாகின்றனர். எவர்களுடைய மார்பானது விஷமமாகி மேடுபள்ளங்களைப் பெற்றிருக்கிறதோ அவர்கள் ஆயுதத்தினால் மரணமடைகிறவர்களு மாகின்றனர்.

If the chest is even without depressions and elevations, he will be amazingly rich ; if it is large he will be a hero ; if small he will be poor ; if it is uneven he will be poor and meet death by some weapon. (29)

శ్లో॥ విషమైర్విషమోజత్రు భిరర్థవిహీనోస్థిసన్ధిపరిణాహైః ।
ఉన్నతజత్రుర్భోగీ నిమ్నైర్నిస్స్వోర్థవాన్ పీనైః ॥ ॥ 30 ॥

(சு-ம்) விஷமைர் விஷமோஜத்ருபிரர்த்த விஹீநோஸ்தி ஸந்திபரிணாஹை:
உந்நதஜத்ருர் போகீ நிம்நைர் நிஸ்வோர்த்தவாம் பீனை:.

பதம்.	பொருள்.
விஷமை:	ஒன்றோடொன்று சரியாகாதவையான
ஜத்ருபி:	தோள்கழுத்துகளின் சந்தியோடு கூடினவன்
விஷம:	கொடியனுகவும்
அஸ்திஸந்தி	எலும்புகளினுடைய சந்தியில்
பரிணஹை:	அகலத்தையுடைய ஜத்துருக்களோடு கூடியவன்
அர்த்தவிஹின:	செல்வமில்லாதவனுகவும்
உந்நதஜத்ரு:	உயர்ந்திருக்கிற ஜத்துருக்களையுடையவன்
போகி	சுகியாகவும்
நிம்மனை	ஆழ்ந்த ஜத்துருக்களோடு கூடினவன்
நிஸ்வா:	தரித்திரனுகவும்
பீனை:	பருத்த ஜத்துருக்களோடு கூடினவன்
அர்த்தவான்	செல்வத்தையுடையவனுமாக
பவதி	ஆகிறுன்.

(பொ-ரை) ஜத்துரு வென்னும் தோள் கழுத்துகளின் சந்தியானது விஷமமாகி ஒன்றோடொன்றுசரியாகாதிருக்கில் புருஷன்விஷமமான சுவபாவமுடையவனுகவும், எலும்புகளின் சந்தியில் விசாலமாயிருக்கில் செல்வமில்லாதவனும், உயர்ந்திருச்கில் சுகியாகவும், ஆழ்ந்திருக்கில் தரித்திரனுகவும், பருத்திருக்கில் செல்வத்தையுடையவனுகவும் ஆகிறுன்.

Collar bones.

If the Collar bones be uneven and unlike he will be wicked; if the joints be broad he will be poor; if they are high he will be in comfort; if low he will be poor; if large he will be wealthy. (30)

శ్లో॥ చిపిటగ్రీవో నిస్స్వః శుష్కా సశిరా చ యస్య వా గ్రీవా ।
మహిషగ్రీవః శూరః శస్త్రాంతో వృషసమగ్రీవః ॥ ॥ ౩౦ ॥

(சு-ம்) சிபிடக்ரீவோ நிஸ்வ: ஶுஷ்கா ஸஸிராச யஸ்ய வாக்ரீவா—மஹிஷக்ரீவஶ்ஶூர: ஶஸ்த்ராந்தோ வ்ருஷ ஸமக்ரீவ:.

பதம்.	பொருள்.
சிபிடக்ரீவ:	தட்டையான கழுத்தையுடையவனும்
யஸ்ய	எவனுடைய

க்ரீவ:	கழுத்தானது
ஶுஷ்காச	சதையின்றியே உலர்ந்தும்
ஸஸிராச	நரம்புகளோடு கூடியிருக்கிறதோ (அவனும்)
நிஸ்வ:	தரித்திரன்
மஹிஷக்ரீவ	எருமைக்கிடாவின் கழுத்தைப் போன்ற கழுத்தையுடையவன்
ஶூர:	சூரன்
வ்ருஷஸமக்ரீவ:	எருதின் கழுத்தைப் போன்ற கழுத்தையுடையவன்
சஸ்திராந்தா:	ஆயுதத்தினால் மரிக்கிறவனுமாக
(பவதி	ஆகிறான்).

(பொ-ரை) தட்டையான கழுத்தையுடையவனும், எவனுடைய கழுத்தானது சதையின்றி உலர்ந்தும் நரம்புகளோடு கூடியிருக்கிறதோ அவனும், தரித்திரன். எருமைக்கிடாவின் கழுத்தைப் போன்ற கழுத்தையுடையவன் ஆயுதத்தினால் மரிக்கிறவனுமாக ஆகிறான்.

Neck.

If the neck be narrow or if the neck is wanting in flesh and is dry and covered with tendons and blood vessels he will be poor; if his neck is like that of the buffaloe he will die of some weapon. (31)

శ్లో॥ కంబుగ్రీవో రాజా ప్రలంబకంఠః ప్రభక్షణో భవతి ।
పృష్ఠమభగ్నమరోమమర్థవతాం శుభదమతోఽన్యత్ ॥ ॥ 32 ॥

(சு-ம்) கம்புக்ரீவோ ராஜா ப்ரலம்ப கண்ட: ப்ரபக்ஷணோ பவதி- ப்ருஷ்டமபக்னமரோம மர்த்தவதா மஶுபத மதோந்யத்.

பதம்.	பொருள்.
கம்புக்ரீவ:	சங்குபோன்ற கழுத்தையுடையவன்
ராஜா	அரசனாகவும்
ப்ரலம்பகண்ட:	தொங்குகிற கழுத்தையுடையவன்
ப்ரபக்ஷண:	நன்றாக புசிக்கிறவனாகவும்
பவதி	ஆகிறான்
அர்த்தவதாம்	தனிகர்களுடைய
ப்ருஷ்டம்	முதுகானது

அபக்ரம்	வணங்காததும்
அரோமஸம்	மயிர்களற்றதுமாக
பவதி	ஆகிறது
அத:	இதைக்காட்டிலும்
அந்யத்	வேறுவிதமான முதுகானது
அஸுபதம்	அசுபத்தை தருவதாகும்

(பொ-ள்) சங்குபோன்ற கழுத்தை யுடையவன் அரசனாகவும், தொங்குகிற கழுத்தையுடையவன் நன்றாக புசிக்கிறவனாகவும் ஆகிறான். தனிகர்களுடைய முதுகானது வணங்காததும், மயிர்களற்றதுமாக ஆகிறது. இதனிலும் வேறு விதமான முதுகானது அசுபத்தைத் தருவதாகும்.

Back.

If the neck is like the conch he will be a king; if the neck is in a hanging state, he will be a glutton. If the back is even and not covered with hairs he will be rich. If uneven and hairy he will be poor. (32)

శ్లో॥ అస్వేదనపీనోన్నత సుగంధిసమరోమ సంకులాః కక్షాః।
విజ్ఞాతవ్యాధని నామతోన్యథార్థైర్విహీనానాం॥ ॥ 33 ॥

(ச-ம்) அஸ்வேதந பீனோந்நத ஸுகந்திஸமரோம ஸங்குலா: கக்ஷா:- விக்ஞாதவ்யா தனிநா மதோந்யதார்தைர் விஹீநா நாம்.

பதம்.	பொருள்.
தனி நாம்	தனிகர்களுடைய
கக்ஷா	கக்ஷங்கள்
அஸ்வேதந	வேர்வையற்றவையும்
பீநா	பருத்தும்
உந்நத	உயர்ந்தும்
ஸுகந்தி	நல்லமணத்தை யுடையவையும்
ஸம	சரியானவையும்
ரோமஸங்குல:	மயிர்களால் அடர்ந்தவையுமாக
விக்ஞாதவ்யா	அறியத்தக்கவைகள்
அத:	இவ்விதகக்ஷங்களைப் பார்க்கிலும்
அந்யதா	வேறுவிதமான கக்ஷங்கள்
அர்த்தை:	தனங்களால்
ஹீநா நாம்	குறைந்தவர்களுக்கு
(பவத:	ஆகின்றன)

(பொ-ரை) மஹாதனிகர்களுடைய கக்ஷங்களென்னும் தோளின் அடிப்புறங்கள் வேர்வையற்று பருத்துலர்ந்து நன் மணம் பெற்று மேடு பள்ளங்களின்றியே மயிர்களாலடர்ந்திருப்பவைகளாம். இவ்விதமாக இராமல் வேறு லக்ஷணங்களுடைய கக்ஷங்கள் தரித்திரருக்கு உண்டாகின்றன.

Armpits.

If the Armpits do not petspire but are large dry and even and thickly covered with hair and emit a good smell he will be very weakhy, if otherwise he will be poor. (33)

శ్లో॥ నిర్మాంసౌరోమచితౌ భగ్నావల్పౌచ నిర్ధనస్యాంసౌ ।
విపులావప్యుచ్ఛిన్నౌ సుశ్లిష్టౌ సౌఖ్యవీర్యవతాం ॥ ॥ ౩౪ ॥

(சு-ம்) நிர்மாம்ஸௌ ரோமசிதௌ பக்நாவல்பௌச நிர்த்தநஸ்யாம்ஸௌ
விபுலா வப்யுச்சின்னௌ ஸம்ஶ்லிஷ்டௌ ஸௌக்ய வீர்யவதாம்.

பதம்.	பொருள்.
நிர்மாம்ஸௌ	மாம்ஸமற்றவையும்
ரோமசிதௌ	மயிர்களாலடர்ந்தவையும்
பக்நௌ	வணங்கியும்
அல்பௌ	சிறுத்துமிருக்கிற
அம்ஸௌ	தோள்கள்
நிர்த்தநஸ்ய	தரித்திரனுக்கும்
விபுலா	விசாலமாயும்
உச்சின்னௌ	உந்நதமாயும்
ஸம்ஶ்லிஷ்டௌ	சேர்ந்திராநின்ற (தோள்கள்)
ஸௌகிய வீர்யவதாம்	ஸௌக்கியம், வீரியம் இவைகளையுடைய அரசர்களுக்கும்
பவத:	ஆகின்றன.

(பொ-ரை) மாம்ஸமின்றியே உலர்ந்தும், மயிர்களால் அடர்ந்தவையும், வணங்கி சிறுத்திருப்பவையுமான தோள்கள் தரித்திரருக்கு ஆகின்றன. விசாலமாகி கழுத்தின் சந்தியினின்று வேறுபட்டவைபோ லிராதவைகளாகி நன்றாக சேர்ந்திருப்பவையுமான தோள்கள் ஸௌக்கியம், வீரியம் இவைகளையுடைய அரசர்களுக்கு ஆகின்றன.

Shoulders.

If the Shoulders are not fleshy, but dry and thick'y covered with hair, inclining and small, he will be poor; if they are broad and

(appear not to be separated from the joints of the neck) high and close he will be a king having comfort and power. (34)

శ్లో॥ కరికరసదృశౌవృత్తౌ వాజానువలంబినౌ సమాపీనౌ ।
బాహూపృథివీశానామధమానాంరోమశౌహ్రస్వౌ ॥ ॥ ౩౫ ॥

(சு-ம்) சரிகரசத்ருசௌவ்ருத்தா வாஜாநுவலம்பிநௌ ஸமௌபீநௌ-பாஹூப்ருதிவீசாநா மதமாநாம் ரோமசௌஹ்ரஸ்வௌ

பதம்.	பொருள்.
சரி	யானையினுடைய
கர	துதிக்கையோடு
சத்ருசௌ	சரியானவையும்
வ்ருத்தௌ	உருண்டவையும்
ஆஜாநு	முழங்கால்வரையில்
அவலம்பிநௌ	தொங்குகிறவையும்
ஸமௌ	சரியானவையும்
பீநௌ	பருத்துமிருக்கிற
பாஹூ	புஜங்கள்
ப்ருதிவீசாநாம்	அரசர்களுக்கும்
ஹ்ரஸ்வௌ	குறுகியும்
ரோமசௌ	மயிர்களடர்ந்தனவாயுமான புஜங்கள்
அதமாநாம்	அதமர்களுக்கும்
(பவத:	ஆகின்றன).

(பொ-ரை) மஹாமத கஜத்தின் துதிக்கை போன்றவையும், ஒன்றோடொன்று ஸமமாகிப் பருத்துருண்டு முழங்கால் வரையில் தொங்குகிறவையுமான புஜங்கள் அரசர்களுக்கும், குறுகி மயிர்களால் நிறைந்த புஜங்கள் அதமர்களுக்கும், ஆகின்றன.

Arms.

If the Arms are of large size and well formed and shaped round like the trunk of an elephant and extend to the knees when suspended, he will be a prince; but if they are short and hairy he will be most mean. (35)

శ్లో॥ హస్తాంగుళయోదీర్ఘాశ్చిరాయుః పాపవలితాశ్చసుభగానాం ।
మేనావినాంచ సూక్ష్మాశ్చపిటాః కరకస్యనిరతానాం ॥ ॥ ౩౬ ॥

(சு - ம்) ஹஸ்தாங்குளயோ தீர்க்காஸ் சிராயுஷா மவலிதாஸ்ச ஸ்பகானும் மேதாவினாஞ்ச ஸூக்ஷ்மாஸ் சிபிடா: பரகர்ம நிரதாநாம்.

பதம்.	பொருள்.
தீர்க்கா:	நீண்டிருக்கிற
ஹஸ்தாங்குளா:	கைவிரல்கள்
சிராயுஷாம்	தீர்க்காயுளைப்பெற்றவர்களுக்கும்
அவலிதா:	சதைமடிப்பில்லாத (கைவிரல்கள்)
ஸுபகானும்ஸ்ச	பாக்கியவான்களுக்கும்
ஸூக்ஷ்மா:	சிறியவிரல்கள்
மேதாவினாம்	புத்திசாலிகளுக்கும்
சிபிடா:	தட்டைவிரல்கள்
பர	அயலாருடைய
கர்மா	தொழிலில்
நிரதாநாம்	பற்றுதலையுடையவர்களுக்கும்
பவந்தி	ஆகின்றன

(பொ-ரை) நீண்டிருப்பவையான கைவிரல்கள் தீர்க்காயுளையுடையார்களுக்கும், கோணிவணங்கியிராமல் நிமிர்ந்தவிரல்கள் பாக்கியசாலிகளுக்கும், குறுகியவிரல்கள் அயலாருக்கு அடிமைத்தொழில் செய்வார்களுக்குமுண்டாகின்றன.

Finger.

One who has long fingers will be in comfort; if the skin of his fingers is covered in folds, he will be an intelligent man and if they are flat he will live in servitude. (36)

శ్లో॥ స్థూలాభిర్ధనరహితాః బహిర్నతాభిశ్చ శస్త్రనిర్యాణాః ।
కపిసదృశకరాధనినో వ్యాఘ్రోపమ పాణయః పాపాః ॥ ॥ 32 ॥

(சு-ம்.) ஸ்தூலாபிர் தனரஹிதா: பஹிர்னதாபிஸ்ச ஶஸ்த்ரநிர்யாணா: கபிஸத்ருஶகராத நினோவ்யாக்ரோபமபாணய: பாபா:.

பதம்.	பொருள்.
ஸ்தூலாபி:	பருத்த (விரல்களோடு கூடியவர்கள்)
தனரஹிதா:	தனமில்லாதவர்கள்
பஹிர்னதாபி	வெளிப்புறத்தில் வணங்கியிருக்கிற (விரல்களோடு கூடியவர்கள்)

ஶஸ்த்ரை	ஆயுதங்களால்
நிர்யாணா:	மரணத்தையுடையவர்களும்
கபிஸத்ருஶகரா:	குரங்கின் கையைப்போன்ற கையையுடையவர்கள்
தனின:	தனிகர்களாகவும்
அறுபத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

Here ends the 69th chapter treating of the
5 Maha purushas in the Brihat Samhita by Sree Varha Mihirar.

புருஷ ஸாமுத்திரிகம் முற்றிற்று.

ஸ்த்ரீ ஸாமுத்திரிகம்

எழுபதாம் அத்தியாயம்.

70th CHAPTER.

இவ்வத்தியாயத்தில் இருபத்தாறு ஸ்லோகங்களால்
ஸ்த்ரீலக்ஷணம் சொல்லப்படுகிறது.

In this 70th Chapter, we shall proceed to describe the features of women in 25 stanzas.

శ్లో॥ స్నిగ్ధోన్నతాగ్రతను తామ్రనఖౌ కుమార్యాః పాదౌ సమోపచితచారునిగూఢ
గుల్ఫౌ । శ్లిష్టాంగులీకమలకాంతితలౌ యస్యాస్తాముద్వహేద్యది భువో
ధిపతిత్వమిచ్ఛేత్ ॥ ॥ ౧ ॥

(சு-ம்) ஸ்நிக் தோந்ந தாக்ர தனு தாம்ரனகௌ குமார்ய: பாதௌ ஸமோப
சித சாருநிகூடகுல்பௌ -ஸ்லிஷ்டாங்குலீ கமலகாந்தி தலௌ யஸ்
யாஸ்தா முத்வஹேத்யதி புவோதி பதித்வமிச்சேத்.

பதம்.	பொருள்.
யஸ்யா:	எந்த
குமார்ய:	பெண்ணின்
பாதௌ	பாதங்கள்
ஸ்நிக்த	மழமழப்புள்ளவையும்
உந்நதாக்ர	உயர்ந்த நுனியை யுடையவையும்
தனு	சூக்ஷ்மமான
தாம்ர	சிவந்த
நகௌ	நகங்களை யுடையவையும்
உபசித	வளர்ச்சியுள்ளதும்
சாரு	அழகுள்ளதும்
நிகூட	மறைந்துமிருக்கிற
குல்பௌ	கணுக்கால் கரடுகளை யுடையவையும்
கமல	தாமரைமலரின்
காந்தி	காந்திபோன்ற காந்தியுள்ள
தலௌ	உள்ளங்கால்களை யுடையவையுமாக
(பவதி:	ஆகின்றனவோ)

தாம்	அப்படிப்பட்ட கன்னிகையை
உத்வஹேத்யதி	விவாகம் செய்துகொள்ளில்
புவ:	பூமிக்கு
அதிபதித்வம்	அரசனாயிருக்கையை
இச்சேத் .	இச்சிப்பான்.

(பொ-ரை) எந்தபெண்ணினுடைய பாதங்கள் மழமழப்புடையவையும், உயர்ந்த நுனியைப் பெற்றவையும், சூக்ஷ்மமும் சிவந்தவையுமாகிய நகங்களையுடையவையும், சரியாக மேடுபள்ளமில்லாமல் சதைபெருத்தவையும், அழகுள்ளவையும், மறைந்திருக்கிறகணுக்காலின் கறடுகளையுடையவையும், சேர்ந்திருக்கிற விரல்களைப்பெற்றவையும், தாமரைமலரின் சாந்திபோன்ற காந்தியைப்பெற்ற உள்ளங்கால்களையுடையவையுமாக இருக்கின்றனவோ, அவளைவிவாகஞ்செய்தவன் பூமியைஅதிபதியாக ஆளஇச்சிக்கிறவன் (அவளைவிவாகம் செய்தால் இராஜாவாகிறான் என்பதுகருத்து).

He who marries a woman with smooth feet having elevated extremities, with short red nails, equal even and invisible ankles covered thick with flesh, with close toes and with the soles of the gloss of the lotus, such a man will aspire to reign as king *i. e.*, (will become king). (1)

శ్లో॥ మత్స్యాంకుశాబ్జయవవజ్రహలాసిచిహ్నావస్వేదనౌ మృదుతలౌ చరణౌ ప్రశస్తౌ।
జంఘే చ రోమరహితే విశిరే సువృత్తే జానుద్వయం సమమనుల్బణసంధిదేశం॥ ౨॥

(சு-ம்) மத்ஸ்யாங்குசாப்ஜயவவஜ்ர ஹலாஸி சிந்ஹாவஸ்வேதநௌ ம்ருதுதலௌசரணௌ ப்ரசஸ்தௌ-ஜங்கேச ரோமரஹிதே விசிரே ஸுவ்ருத்தே ஜாநுத்வயம் ஸமநுல்பண சந்திதேசம்.

பதம்.	பொருள்.
மத்ஸ்ய	மச்சம்
அங்குச	அங்குசம்
அம்புஜ	தாமரை
யவ	யவம்
வஜ்ர	வஜ்ரம்
ஹல	கலப்பை
அஸி	கத்தி (இவைமுதலிய)
சிந்ஹா	அடையாளங்களை உடையவையும்
அஸ்வேதநௌ	வேர்வையற்றவையும்

மிருதுதலௌ	மெல்லியஉள்ளங்கால்களை உடையவையுமான
சரணௌ	பாதங்கள்
ப்ரசஸ்தௌ	சிறந்தவையாம்
ஜங்கேச	முழங்கால் கீழ்ப்புறங்கள்
ரோமரஹிதே	மயிர்களில்லாமலும்
விஸிரே	நரம்பில்லாமலும்
ஸுவ்ருத்தே	உருண்டை வடிவாய் இருப்பவையும்
ப்ரசஸ்தே	சிறந்தனவாம்
ஜானுத்வயம்	இரண்டுமுழங்கால்களும்
சமம்	ஒன்றோடொன்று சரியானதாய்
அனுல்சண	பருத்திராத
சந்திதேசம்	சந்தியின் ப்ரதேசத்தை யுடையதாக
(பவதி	ஆகிறது).

(பொ-ள்) மத்ஸியம், அங்குசம், கமலம், யவதான்னியம், வச்ராயுதம் கலப்பை, கத்தி ஆகிய இவைகளின் ரேகைகளைப்பெற்று, வேர்வையற்று, மெதுவாகிய உள்ளங்கால்களையுடைய பாதங்கள் சிறந்தவையாம். மயிர்களின்றி நரம்புக ளில்லாதவையான முழங்கால் கீழ்ப்புறமாகிய ஜங்கை சிறந்ததாம். ஒன்றோடொன்று சரியானதாகிச் சந்தியில் பருத்திராமல் ஒரே விதமாய் இருக்கிற முழந்தாள்கள் சிறந்தவையாம்.

If the lines in the soles of the feet be in shape, like the fish, the elephant driver's weapon, the lotus, barley, the Vajrayutha, the plough or the sword and if the soles be soft devoid of perspiration, it is commendable. If the shanks be not hairy and not covered with blood vessels, and if the knees be equal, not enlarged and like in appearance, it is also commendable. (2)

శ్లో॥ ఊరూఘనౌకరికరప్రతిమావరోమౌ అశ్వత్థపత్ర సదృశావిపులంచగుహ్యం ।
శ్రోణీలలాటమురుకూర్మసమున్నతంచ గూఢోమణిశ్చవిపులాంశ్రియమాదధాతి॥

(சு-ம்) ஊருகனௌ கரிகரப்ரதிமாவ ரோமா வஸ்வத்தபத்ர ஸத்ருசா விபுலஞ்ச குஹ்யம்-ஸ்ரோணீ லலாட முருகூர்மஸமுன்னதஞ்ச கூடோ மணிஸ்ச விபுலாம் ஸ்ரியமாததாதி.

பதம்.	பொருள்.
கனௌ	நெருங்கியும்
கரிகர	யானைதுதிக்கைக்கு
ப்ரதிமா	நிகரானதும்

அரோமௌ	மயிரில்லாததுமான
ஊரு	தொடைகளும்
அஸ்வத்தபத்ர	அரசிலேக்கு
ஸத்ருமம்	சமமானதும்
விபுலம்	விசாலமானதுமான
குஹ்யம்	யோநியும்
ஊரு	விசாலமும்
கூர்மஸமுந்நதஞ்ச	ஆமைபோலுயர்ந்ததுமாகிய
ஶ்ரோணிலலாடம்	இடுப்பின்நெற்றி(யோனியின் மேற்புறமும்)
ஶஸ்தம்	சிறந்தவையாம்
கூட:	மறைந்திருக்கிற
மணிஸ்ச	யோனியின்உட்புற லிங்காகார நாடியானது
ஶ்ரியம்	சம்பத்தை
ஆததாதி	செய்கிறது.

(பொ-ள்) ஒன்ரோடொன்று நெருக்கமுற்று யானை துதிக்கையோடொத்தவையும், மயிரற்றவையுமான தொடைகளும், அரசமரத்தின் இலைபோன்ற ஆகாரத்தை யுடையதும், விசாலமுமானயோனியும், விசாலமாகி ஆமைபோல் உயர்ந்ததாகிய யோனியின் மேற்புறமும்,மறைந்திருக்கிறதான யோனியின் உட்புறத்திலிருக்கிற லிங்காகார நாடியும், ஆகிய இவைகள் சிறந்தவையாகி அதிகசெல்வத்தை அளிக்கின்றன.

If the thighs are close and be like the trunk of the elephant and devoid of hair, and if the vagina be broad and of the shape of Banian leaf (Ficus religiosa) and if the part above the vagina be broad and shaped like the turtle and if the *glans vagina* be hid from view, these are commendable and she will be very wealthy. (3)

శ్లో॥ విస్తీర్ణమాంసోపచితో నితంబో గురుశ్చధత్తే రసనాకలాపం ।
నాభిర్గభీరా విపులాంగనానాం ప్రదక్షిణావర్తగతా ప్రశస్తా॥ ॥౪॥

(சு-ம்) விஸ்தீர்ண மாம்ஸோபசிதோ நிதம்போகுருஶ்சதத்தே ரஸநாகலாபம்—நாபிர்கபீராவிபுலாங்க நாநாம் ப்ரதக்ஷிணாவர்த்த கதாப்ரஶஸ்தா.

பதம்	பொருள்.
அங்கநாநாம்	ஸ்திரீகளுடைய
விஸ்தீர்ண	விசாலமும்
மாம்ஸோபசிதம்	சதைபெருத்ததும்

குருஸ்ச	பாரமுடையதுமான
நிதம்ப:	இடுப்பின்கீழ்ப்பக்கம்
ரஸநாகலாபம்	அரைநூல்மாலைஎன்னும் ஆபரணத்தை
தத்தே	தரிக்கிறது
கபீரா	ஆழ்ந்ததும்
விபுலா	அகன்றதும்
ப்ரக்ஷிணாவர்த்தகிதா	வலமாகவோடும் சுழியைப் பெற்றதுமான
நாபி:	தொப்புளானது
பிரஶஸ்தா	சிறந்தது.

(பொ - ரை) அகன்றதாகி மாம்ஸத்தினால் பருத்துயர்ந்து பளுவுடையதுமான ஸதிரீகளுடைய இடுப்பின் பின்புறமானது அரைநூல் மாலை என்னும் ஆபரணத்தை அணியும். ஆழ்ந்ததும், அகன்றதும் பிரதக்ஷிணமான சுழியைப் பெற்றதுமாகிய நாபி சிறந்ததாகும்.

If the back of tho waist is broad, large, high and heavy with flesh, the woman will wear the ornament known as waist stray ; the navel that is broad deep and turns from left to right, is commendable. (4)

శ్లో॥ మధ్యం స్త్రియా స్త్రివలినాథ మరోమశంచ వృత్తౌ ఘనావవిషమౌకఠినావురస్యౌ । రోమాపవర్జిత మురోమృదుచాంగనానాం గ్రీవాచకంబునిచతార్థసుఖానిధత్తే॥ ॥ ౫ ॥

(சு-ம்) மத்யம் ஸ்த்ரிபாஸ்த்ரிவலிநாத மரோமஶஞ்சவ்ருத்தௌ கநாவ விஷமௌ கடிஞவுரஸ்யௌ - ரோமாபவர்ஜித முரோம்ருது சாங்கநாநாம் க்ரீவாச கம்பு நிசதார்த்த ஸுகாநிதத்தே.

பதம்.	பொருள்.
ஸ்த்ரியா	ஸ்திரீயினுடைய
மத்யம்	இடையானது
த்ரிவலநாதம்	மூன்றும்சதைமடிப்புள்ளதும்
அரோமஸம்	மயிரில்லாததுமாயிருக்கில்
(ஸ்ரேஷ்டம்	சிறந்தது)
வ்ருத்தௌ	உருண்டவையும்
கநௌ	நெருங்கியவையும்
அவிஷமௌ	ஒன்றோடொன்று சமமானதும்
கடிநௌ	கடினமானதுமான
உரஸ்யௌ	ஸ்தனங்கள்

ஶ்ரேஷ்டா	சிறந்தனவாம்
அங்கநாநாம்	ஸ்திரீகளுடைய
உர:	மார்பானது
ரோமாபவர்ஜிதம்	மயிரில்லாமல்
ம்ருதுச	மெல்லியதாயிருக்கில் (சிரேஷ்டம்)
கம்புநிசிதா	சங்குபோலுயர்ந்த
க்ரிவா	கழுத்தானது
அர்த்தஸுகாநி	தனம் சுகம் இவைகளை
தத்தே	செய்கிறது.

(பொ-ளை) திரிவலி என்னும் மூன்று சதைமடிப்போடு கூடி மயிரில்லாத இடையும், உருண்டு, நெருங்கி, ஒன்றோடொன்று பேதமின்றி, கடினங்களான ஸ்தனங்களும், மயிரின்றியே மெதுவான மார்பும், சங்கு போன்றதாகி உயர்ந்திருக்கிற கழுத்தும், ஸ்திரீகளுக்கு தனசுகங்களைத் தருகின்றன.

If there are three fold across the waist with no hair, and if the breasts be round, firm and both alike, and if the chest is soft without hair and if the neck is high and like the conch, she will be happy. (5)

శ్లో॥ బంధుజీవకుసుమోప మోధరోమాంసలో రుచిర బింబరూపభృత్ ।

కుందకుడ్మళ నిభాస్సమా ద్విజా యోషితాంపతి సుఖామితార్థదాః॥ ॥ ௨ ॥

(சு-ம்) பந்து ஜீவகுஸுமோப மோதரோமாம்ஸலோருசிர பிம்ப ரூபப்ருத்-குந்த குட்மள நிபாஸ்ஸமாத் விஜாயோஷிதாம் பதி சுகாமிதார்த்ததா:.

பதம்.	பொருள்.
பந்து ஜீவ	செம்பருத்தியின்
குஸும	புஷ்பத்தை
உபம:	நிகர்த்ததும்
மாம்ஸள:	சதைபருத்ததும்
ருசிர	அழகிய
பிம்ப	கோவைப்பழத்தின்
ரூப	உருவத்தை
ப்ருத்	பரிப்பதுமாகிய
அத:	உதடும்
குந்த	குருக்கத்தியின் (மல்லிகை)
குட்மள	மொக்கை

நிபா:	ஒத்து
சமா:	ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாத
த்விஜாஸ்ச	பற்களும்
யோஷிதாம்	ஸ்திரீகளுக்கு
பதி	பதியினாலுண்டாகும்
சுக	சுகம்
அமித	அதிகமான
அர்த்த	தனமிவைகளை
தா:	கொடுப்பவைகளாக
(பவந்தி	ஆகின்றன).

(பொ-ள்) செம்பருத்திபுஷ்பம் போன்றதும், அழகிய கோவப்பழத்தோடொத்ததும், சதைபருத்திருப்பதுமாகிய கீழ் உதடும், குறுக்கத்தி மொக்குகளுக் கீடாக ஒன்றோடொன்று சரியானவைகளுமான பற்களும், ஸ்திரீகளுக்கு பதியினாலுண்டாகும் சுகம், செல்வம் இவைகளைத் தருவனவாம்.

If the lower lip is thick withflesh and be like the china rose and the beautiful cherry and if the teeth well-proportioned and like jessamine buds, she will enjoy the pleasures of married life, comfort and wealth. (6)

శ్లో॥ దాక్షిణ్యయుక్తమశఠంపరపుష్టహంస వల్గుప్రభాషితమదీనమనల్పసౌఖ్యం ।
నాసాసమాసమపుటారుచిరాప్రశస్తా దృక్నీలనీరజదళద్యుతిహారిణీచ ॥ ౭ ॥

(சு - ம்) தாக்ஷிண்ய யுக்தமசடம் பரபுஷ்ட ஹம்ஸ வல்குப்ரபாஷித மதீன மனல்ப ஸௌக்யம் - நாஸாஸமா ஸமபுடாருசிராப்ரசஸ்தா த்ருக் நீலநீரஜ தளத்யுதி ஹாரிணீச

பதம்.	பொருள்.
ப்ரபாஷிதம்	ஸம்பாஷணமானது
தாக்ஷிண்யயுக்தம்	நயத்தோடு கூடியதும்
அசட	வஞ்சனை யில்லாததும்
பரபுஷ்ட	குயில்கள்
ஹம்ஸ	அன்னங்கள் (இவைகளுடைய ஸ்வரம் போல)
வல்கு	சுந்தரமானதும்
அதீனம்	தீனதிசையைப் பெறாததுமாகில்
அனல்ப சௌக்யம்	அதிக சௌக்கியத்தைத் தருவதாம்

நாஸா	நாசிகையானது
ஸமா	சரியானதும்
ஸமபுடா	ஒன்றோடொன்று சரியான பிரதேசத்தை யுடையதும்
ருசிரா	அழகியதுமாகில்
ப்ரஶஸ்தா	சிறந்ததாக
(பவதி	ஆகிறது)
நீலஸிரஜ	கருநெய்தலுடைய
தள	இதழின்
த்யுதி	காந்திகளை
ஹாரிணீ	அபஹரிப்பதாகிய
த்ருக்ச	கண்ணும்
(ப்ரஶஸ்தா	சிறந்தது).

(பொ - ரை) ஸ்திரீகளுடைய ஸம்பாஷணமானது நயத்தோடுகூடி, வஞ்சனையின்றி குயில், அன்னம் இவைகளின் குரலை நிகராகப்பெற்று, அழகியதாகி, தீனதசையை யுடையாமலிருப்பது அதிசுகத்தைத் தருவதாகும். நோரகி, ஒன்றோடொன்று சரியானநுனியை யுடையதும் அழகியதுமான நாசிகையும், அலர்ந்த கருநெய்தலினிதழின் காந்தியை வெல்லுகிற காந்தியையுடையதான கண்ணும் சிறந்தவையாம்.

If the voice be musical, simple, not meek and like that of the cuckoo and the swan, and if the nose be smooth with small and equal holes, and if the eyes be brighter than the petals of the full-blown blue lotus, she will be in great comfort. (7)

శ్లో॥ నోసంగతే నాతిపృథూ నలంబే శస్తే భ్రువౌ బాలశశాంకవక్రే ।
అర్ధేందుసంస్థానమరోమశంచ శస్తంలలాటం ననతం నతుంగం ॥ ॥ ౮ ॥

(சு - ம்) நோஸங்கதே நாதிப்ருதூ நலம்பெ ஶஸ்த்ரே பருவௌ பாலஶஶாங்கவக்ரே - அர்த்தேந்து ஸம்ஸ்தான மரோமஶஞ்ச ஶஸ்தம் லலாடம் நநதம் நதுங்கம்.

பதம்.	பொருள்.
நோஸங்கதே	சேராதவையும்
நாதிப்ருதூ	அதிக விசாலங்களாகாதவையும்
நலம்பே	தொங்காதவையும்
பாலஶஶாங்க	பாலசந்திரன்போல்

வக்ரே	கோணியிருப்பவையுமான
ப்ருவா	புருவங்கள்
ஶஸ்தே	சிறந்தவைகள்
அர்த்தேந்து	அர்த்தசந்திரனுடைய
ஸம்ஸ்தானம்	ஆகாரம்போன்ற ஆகாரத்தையுடையதும்
அரோமஶஞ்ச	மயிர்களில்லாததும்
நதம்	வணங்காததும்
நதுங்கம்	உயர்ந்திராததுமான
லலாடம்	நெற்றியானது
ஶஸ்தம்	சிறந்தது.

(பொ - ரை) ஒன்ருேடொன்று சேராமலும், அதிகவிசாலங்களாகாமலும், தொங்காமலும், பாலசந்திரனுகிய மூன்ரும் பிறைபோல் கோணியிருப்பவையுமான புருவங்கள் சிறந்தவைகள். அர்த்தசந்திரன்போன்ற ரூபத்தை யுடையதும், மயிர்களின்றி வணங்காததும், உயர்ந்திராததுமான நெற்றியானது மிகச்சிறந்தது.

If the brows do not unite, are not broad, do not hang down and if they have the shape of the young crescent moon, and if the forehead be like the half moon without any curve and not high, these are commendable. (8)

శ్లో॥ కర్ణయుగ్మమపి యుక్తమాంసలం శస్యతే మృదుసమం సమాహితం ।
స్నిగ్ధనీలమృదుకుంచితైః కచైః మూర్ధజాస్సుఖకరాస్సమం శిరః॥ ॥ ౯ ॥

(சு-ம்) கர்ணயுக்மமபி யுக்தமாம்ஸலம் ஶஸ்யதே ம்ருதுஸமம் ஸமாஹிதம்-ஸ்னிக்த நீலம்ருது குஞ்சிதை கசாமூர்த்த ஜாஸ்ஸுககராஸ் ஸமம் ஶிர:.

பதம்.	பொருள்.
கர்ண	காதுகள்
யுக்மமபி	இரண்டும்
யுக்த	தகுந்தபடி
மாம்ஸலம்	மாம்ஸத்தையுடையதும்
ம்ருது	மெல்லியதும்
ஸமம்	ஒன்ருேடொன்று சரியானதும்
ஸமாஹிதம்	சப்தத்தைக்கேட்பதில் ஜாக்கிறதையுடையதுமாகில்

ஶஸ்யதே	புகழப்படுகிறது
ஸ்னிக்த	மழமழப்புள்ளவையும்
நீல	கறுத்தவையும்
ம்ருது	மேதுவானவையும்
குஞ்சித	கோணிவணங்கினவையும்
ஏகஜா:	ஒவ்வொன்றாக உண்டானவையுமான
மூர்த்தஜா	தலைமயிர்கள்
ஸுககரா:	சுகத்தைத்தருகிறவைகள்
ஸமம்	(கோணல், மேடுபள்ளங்களின்றி) சரியான
ஶிர:	தலையானது
(ஸஸ்தம்	சிறந்தது).

(பொ-ரை) தகுந்தபடி மாம்ஸத்தைப் பெற்றதும், மேதுவானதும், ஒன்றோடொன்று சரியானதும், சப்தத்தைக்கேட்பதில் ஜாக்கிறதையுடையதுமான செவிகளிரண்டும் சிறந்ததாகும். மழமழப்புடையதாகி, கறுத்து, மெதுவாகிக், கோணி, வணங்கியும், இரட்டையாக வன்றி ஒவ்வொன்றாக முளைத்து மிருக்கிற தலைமயிர்களும், நீண்டு, கோணி, மேடுபள்ள மில்லாமல் சிறிதான தலையும் சிறந்தவையாம்.

If the ears are proportionately fleshy, soft, equal and sharp in hearing; and if the hairs over the head be smooth, soft curled and if they grow singly and the head be long and uneven, these are commendable. (9)

శ్లో॥ భృంగారాసన వాజికుంజర రథశ్రీవృక్షయూపేషుభి
మాలాకుండలచామరాంకుశ యవైశ్శైలైర్ధ్వజై స్తోరణైః।
మత్స్యస్వస్తికవేదికావ్యజనకైశ్శంఖాతపత్రాంబుజైః
పాదేపాణితలేపివాయువతయోగచ్ఛంతి రాజ్ఞీపదం॥ ॥ ౧౦ ॥

(சு-ம்) ப்ருங்காராஸன வாஜிகுஞ்சர ரதஶ்ரீவ்ருக்ஷ யூபேஷுபிர் மாலாகுண்டல சாமராங்குஶ யவைஶ் ஶைலைர்த்வஜைஸ் தோரணை:-மத்ஸ்யஸ்வஸ்திகவேதி காவ்யஜனைஶ் ஶங்காத பத்ராம் புஜை: பதே பாணிதலேபிவாயுவத யோகச்சந்தி ராக்ஞீபதம்.

பதம்.	பொருள்.
ப்ருங்கார	பொன்கிண்டியாகிய கூஜா
ஆஸன	சிங்காசனம்

வாஜி	குதிரைகள்
குஞ்சர	யானை
ரத	தேர்
ஸுரீவிருக்ஷ	கற்பகவிருக்ஷம்
யூப	யூபஸ்தம்பம்
இஷு	பாணங்கள் (இவைகளையும்)
மாலா	மாலை
குண்டல	குண்டலங்கள்
சாமர	சாமரம்
அங்குஶ	அங்குசம்
யவ	யவதானியம் (இவைகளையும்)
ஶைலை:	மலைகள்
த்வஜை:	டக்கயங்கள்
தோரணை:	தோரணங்கள்
மத்ஸ்ய	மத்ஸியம்
ஸ்வஸ்திக	ஸ்வஸ்திகம்
வேதிகா	வேதி
வ்யஜனக	விசிறி (இவைகளையும்)
ஶங்க	சங்கம்
ஆதபத்ர	குடை
அம்புஜ	கமலம் (இவைகளையும்)
பாதே	காலிலாகிலும்
பாணிதலேபிவா	உள்ளங்கையிலாகிலும்
உபலக்ஷிதா	கூடியிருக்கிற
யுவதய:	ஸ்திரீகள்
ராக்ஞீபதம்	ராஜஸ்திரீ இன்பத்தை
கச்சந்தி।	அடைகின்றனர்.

(பொ-ரை) பொன்கிண்டியாகிய கூஜா, சிங்காஸனம், குதிரை, யானை, தேர், கற்பகவிருக்ஷம், யூபஸ்தம், பாணங்கள், மாலை, குண்டலம், சாமரம், அங்குசம், யவதான்னியம், மலை, டக்கயம், தோரணம், மத்ஸ்யம், ஸ்வஸ்திகம், வேதிகை இவைகளையொத்த ரேகைகளை உள்ளங்கையிலாகிலும், காலிலாகிலும் கூடியிருக்கிற ஸ்திரீகள் ராஜ பத்தினிகளாகின்றனர்.

If the lines in the palm of the hand or in the soles of the feet be in shape like a goblet, the royal seat, the horse, the elephant, a car, the Kalpaka tree, the yupa post, the arrow, a garland, a

pendant, the chamara, the elephant driver's weapon, the barley, a mountain, a flagstaff, a swing, the fish, a cross, or the sacrificial altar, she will be a princess. (10)

శ్లో॥ నిగూఢమణిబంధనా తరుణపద్మగర్భోపమా
కరాన్నృపతియోషితాంతనువికృష్టపర్వాంగుళీ ।
ననిమ్నమపినోన్నతం కరతలంసురేఖాన్వితం
కరోత్యవిధవాం చిరంసుత సుఖార్థసంభోగినీం ॥ ॥ ౧౧ ॥

(சு-ம்) நிகூடமணிபந்தனௌ தருணபத்ம கர்ப்போபமௌ கரௌ ந்ருபதி யோஷிதாந்தனு விக்ருஷ்ட பர்வாங்குளீ-நனிம்ன மபிநோன்னதம் கரதலம் ஸுரேகான்விதம் கரோத்ய விதவாம் சிரம் ஸுத ஸுகார்த்த ஸம்போகினீம்

பதம்.	பொருள்.
ந்ருபதியோஷிதாம்	ராஜஸ்திரீகளுடைய
கரௌ	கைகள்
நிகூட	மறைந்திருக்கிற
மணிபந்தனௌ	மணிக்கட்டையுடையவையும்
தருண	அலர்ந்திருக்கிற
பத்ம	தாமரை மலரினுடைய
கர்ப்ப	உட்புறத்தை
உபமௌ	ஒத்தவையும்
தனு	சூக்ஷ்மங்களும்
விக்ருஷ்ட	நெருங்கியிராதவையும்
பர்வ	கணுக்களையுடையவையுமான
அங்குளீ	விரல்களையுடையவையுமாக
(பவத:	ஆகின்றன)
நனிம்னமபி	பள்ளமாகாததும
நோன்னதம்	உயர்ந்திராததும்
ஸுரேகாஞ்சிதம்	அழகியரேகைகளோடு கூடியதுமான
கரதலம்	உள்ளங்கையானது
(ஸ்திரியம்	ஸ்திரீயை)
சிரம்	நெடுங்காலம்
அவிதவாம்	விதவையாகாதவளாகவும்
ஸுத	பிள்ளைகள்
ஸுக	சுகம்

அர்த்த	தனம் (இவைகளுடைய)
ஸம்போகினீம்	அனுபவத்தையுடையவளுமாக
கரோதி	செய்கிறது.

(பொ - ரை) ராஜமஹிஷியினுடையகைகள் மறைந்த மணிக்கட்டையுடையவையும், அலர்ந்தழகிய தாமரை மலரின் உட்புறம் போன்றவையும், சூக்ஷமங்களாயும், நெருங்கியுமிராதபடி தூரத்திலிருக்கிற கணுக்களையுடையவையுமான விரல்களைப் பெற்றவையுமாகின்றன. பள்ளமுமாகாமல், உயர்ந்ததுமாகாமல், சமமானரேகைகளோடு கூடிய உள்ளங்கையானது, ஸ்திரீயை நெடுங்காலம் சுமங்கலியாகவும், பிள்ளை, சுகம், தனம் ஆகிய இவைகளைப்பெற்று அனுபவிக்கிறவளாகவும் செய்கிறது.

Those of royal birth will have invisible wrists, the hands like the interior of the beautiful-blown lotus with short fingers, joints long, and the palm neither high nor deep bearing commendable lines; and they will long enjoy marreid life and the pleasures of children, wealth and comfort. (11)

శ్లో॥ మధ్యాంగులింయా మణిబంధనోత్థా రేఖాగతా పాణితలేంగనాయాః ।
ఊర్ధ్వస్థితా పాదతలేథ వాయాపుంసోథవా రాజ్యసుఖాయసాస్యాత్ ॥ ౧౨॥

(சு - ம்) மத்யாங்குலிம்யா மணிபந்தனோத்தா ரேகாகதா பாணிதலேங்கனாயா: - ஊர்த்வஸ்திதா பாததலேத வாயாபும்ஸோதவா ராஜ்யஸுகாயஸாஸ்யாத்.

பதம்.	பொருள்.
அங்கனாயா	ஸ்திரீயினுடைய
பாணிதலே	உள்ளங்கையில்
மணிபந்தனோத்தா	மணிக்கட்டிலுண்டாகிய
யா.	எந்த
ரேகா	ரேகையானது
மத்யாங்குலிம்	நடுவிரலை
கதா	அடைந்ததாக
(பவதி	ஆகிறதோ)
அதவா	இல்லாவிடில்
யா	எந்தரேகையானது
பாததலே	உள்ளங்காலில்
ஊர்த்வஸ்திதா	நிகளமாகஇருக்கிறதோ
அதவா	இல்லாவிடில்

பும்ஸ:	புருஷனுக்கு
ஏவம்	இவ்விதமாக
அஸ்தி	இருக்கிறதோ
ஸா	அந்தரேகையானது
ராஜ்யஸுகாய	ராஜ்ஜிய சுகத்தின்பொருட்டு
ஸ்யாத்	ஆகும்.

(பொ - ரை) ஸ்திரீயினுடைய உள்ளங்கையில் மணிக்கட்டினின்றும் உண்டானரேகையானது நடுவிரலையடைந்தாலும் இல்லாவிடில் உள்ளங்காலில் நிகளமாக ஊர்த்துவரேகை யிருந்தாலும், புருஷனுக்கு இவ்விதமாயிருந்தபோதிலும், அந்தரேகை ராஜ்ஜிய சுகத்தைத்தரும். (ஸ்திரீக்கு இவ்விதரேகை யிருந்த தாகில் அவள்பதி அரசனுவான் என்பது கருத்து).

If there be a line issuing from the wrist and reaching the middle finger or if there are vertical lines in the soles of the feet, she will enjoy the happiness of a sovereign, or the husband will become king. (12)

శ్లో॥ కనిష్ఠికామూలభవాగతాయా ప్రదేశినీమధ్యమికాంతరాళం ।
కరోతిరేఖాపరమాయుషస్సా ప్రమాణమూనాతుతదూనమాయుః ॥ ౧౩ ॥

(சு - ம்) கனிஷ்டகா மூலபவாகதாயா ப்ரதேஶினீ மத்யமிகாந்தராளம்
கரோதிரேகா பரமாயுஷஸ்ஸா ப்ரமாண மூனாது ததூனமாயு:.

பதம்.	பொருள்.
யா	எந்தரேகையானது
கனிஷ்டகா	சுண்டுவிரலினுடைய
மூல	அடியினின்றும்
பவா	உண்டானதாகி
ப்ரதேஶினீ	பெருவிரலுக்கு அடுத்தவிரல்
மத்யமிகா	நடுவிரல் (இவைகளுடைய)
அந்தராளம்	நடுவை
கதா	அடைந்ததோ
ஸா	அந்த ரேகையானது
பரமாயுஷ:	பரமாயுஸுக்கு
ப்ரமாணம்	பிரமாணமாக
(பவதி	ஆகிறது)
ஊனா	நிகளத்தில்குறைந்த ரேகையானது

தத்	அந்த
ஆயு:	ஆயுளை
ஊனம்	குறைந்ததாக
கரோதி	செய்கிறது.

(பொ-ரை) கனிஷ்டிகைஎன்னும் சுண்டுவிரலின் அடியினின்றுமுண்டான எந்தரேகையானது பிரதேசினீ என்னும்பெருவிரலுக்கு அடுத்தவிரலுக்கும் நடுவிரலுக்கும் நடுப்பாகத்தை அடைந்ததோ, அந்தரேகையானது முடிவான ஆயுஸின் கணக்கில் பிரமாணமாகிறது. அது அவ்வளவு நீகளமாயிராமல் குறைந்திருக்கில் ஆயுளைக்குறைக்கிறது.

If the line from below the little finger reach a place between the fore and middle fingers, her age will be in proportion to the extent of that line. (13)

శ్లో॥ అంగుష్ఠమూలేప్రసవస్యరేఖాఃపుత్రాబృహత్యఃప్రమదాస్తుతన్వ్యః ।
అచ్ఛిన్నదీర్ఘాబృహదాయుషాంతాఃస్వల్పాయుషాంఛిన్నలఘుప్రమాణాః॥

(சு-ம்) அங்குஷ்டமூலே ப்ரஸவஸ்யரேகா: புத்ரப்ருஹத்ய: ப்ரமதாஸ்துதன்வ்ய: - அச்சின்னதீர்க்கா ப்ருஹதாயுஷாந்தா: ஸ்வல்புாயுஷாம் சின்னலகுப்ரமாணா:

பதம்.	பொருள்.
(ஸ்திரீணும்	ஸ்திரீகளுடைய)
அங்குஷ்டமூலே	பெருவிரலினடியில்
ப்ரஸவஸ்ய	பிரஸவத்தினுடைய
ரேகா:	ரேகைகள்
(பவந்தி	ஆகின்றன)
ப்ருஹத்ய:	பெரிதாகிய ரேகைகள்
புத்ரா:	பிள்ளைகளென்றும்
தன்வ்ய:	சூக்ஷ்மங்களான ரேகைகள்
ப்ரமதாஸ்ச	பெண்களென்றும்
அச்சின்னதீர்க்கா	நடுவில் அறுமல்நீண்டிருப்பவையான
தா:	அந்த ரேகைகள்
ப்ருஹதாயுஷாம்	தீர்க்காயுளை யுடையார்களென்றும்
சின்ன	அறுந்தும்
லகு	அல்பமுமான
ப்ரமாணா:	அளவையுடைய ரேகைகள்
ஸ்வல்பாயுஷாம்	அல்பாயுளையுடைய பிள்ளைகளென்றும்

சூசகா:	அறிவிப்பிக்கிறவைகளாக
(பவந்தி	ஆகின்றன).

(பொ - ளை) ஸ்திரீகளுக்குப் பெருவிரலடியில் பிரசவத்தைச் சொல்லுகிற ரேகைகள் உண்டாகின்றன, அவைகளில் பெரிதாகிய ரேகைகளால் பிள்ளைகளென்றும், சூக்ஷ்மரேகைகளால் ஸ்திரீ பிரசவமென்றும் நடுவில் அறுமல் நிகளமாயிருக்கிற ரேகைகளால் தீர்க்காயுசையுடைய குழந்தைகளென்றும், நடுவில் அறுந்து நிளமில்லாமல் இருக்கிற ரேகைகளால் அற்பாயுசாகிய பிள்ளைகளென்றும் அறியத்தக்கது.

The lines below the root of the thumb indicate children, the long ones indicate sons and the short ones daughters; the unbroken long ones indicate children which will live up to a good old age and the short lines broken in the middle indicating short lived children.

శ్లో॥ ఇతీదముక్తంశుభమంగనానామతో విపర్యస్తమనిష్టముక్తం ।
విశేషతో నిష్టఫలానియాని సమాసతస్తాన్యకీర్తయామి ॥ ॥ ౧౫ ॥

(சு-ம்) இதீதமுக்தம் ஶுபமங்கனானாமதோ விபர்யஸ்த மனிஷ்ட முக்தம்- விஶேஷதோ நிஷ்டபலானியானி ஸமாஸதஸ்தான் யனுகீர்த்தயாமி.

பதம்.	பொருள்.
இதி:	இவ்விதமாக
இதம்	இந்த
அங்கனானாம்	ஸ்திரீகளுடைய
ஶுபம்	சுபலக்ஷணமானது
உக்தம்	சொல்லப்பட்டது
அத:	இதைக்காட்டிலும்
விபர்யஸ்தம்	வித்தியாசமான லக்ஷணமானது
அனிஷ்டம்	அனிஷ்டத்தைதருவதாக
உக்தம்	சொல்லப்பட்டது
விஶேஷத:	அதிகமாக
யானி	எந்த
அனிஷ்டபலானி	அனிஷ்டபலங்கள்
ஸந்தி	இருக்கின்றனவோ
தானி	அவைகளை
ஸமாஸத:	சுருக்கத்தினால்
அனுகீர்த்தயாமி	சொல்லுகிறேன்.

(பொ — ரா) இவ்விதமாக ஸ்திரீகளுடைய சுபலக்ஷணமான்து சொல்லப்பட்டது. இதைகாட்டிலும்வேருனலக்ஷணங்கள்அசுபபலனைத்தருவதாகும். அவ்வனிஷ்டபலனைத்தரும் லக்ஷணங்கள் விசேஷித்திருப்பதை யான் இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

We have thus described the good features of women; features other than these will not be conducive to happiness. We shall proceed to describe the more important ones of this kind. (15)

శ్లో॥ కనిష్ఠికావాతదనంతరావా మహీంనయస్యాస్స్పృశతీ స్త్రియాస్స్యాత్ ।
గతాధవాంగుష్ఠమతీత్యయస్యాః ప్రదేశినీసాకులటాతిపాపా ॥ ॥ ౧౬ ॥

(சு - ம்) கனிஷ்டிகாவா ததனந்தராவா மஹீம்நயஸ்யாஸ் ஸ்ப்ருஶதீ ஸ்த்ரியாஸ்ஸ்யாத் - கதாதவாங்குஷ்டமதீத்ய யஸ்யா: ப்ரதேஶினீ ஸாகுலடாதிபாபா.

பதம்.	பொருள்.
யஸ்யா:	எந்த
ஸ்த்ரியா:	ஸ்திரீயினுடைய
கனிஷ்டிகாவ:	காலில் சுண்டுவிரலாகிலும்
தத்	அந்த சுண்டுவிரலுக்கு
அனந்தராவா	அடுத்த விரலாகிலும்
மஹீம்	பூமியை
ஸப்ருஶதீ	தொடுகிறதாக
நஸ்யாத்	ஆகிறதில்லையோ
யஸ்யா	எந்தஸ்திரீயினுடைய
ப்ரதேஶினீ	காலில் பெருவிரலுக்கு அடுத்தவிரலானது
அங்குஷ்டம்	பெருவிரலை
அதீத்ய	அக்கிரமித்து
சதா	போயிருக்கிறதோ
ஸா	அவள்
குலடா	வியபசார ஸ்திரீயாகவும்
அதிபாபா	அதிக பாவத்தைச் செய்கிறவளுமாக
(பவதி	ஆகிருள்).

(பொ-ரா) எந்தஸ்திரீயினுடைய காலில் சுண்டுவிரலாகிலும், அதற்கடுத்தவிரலாகிலும் பூமியில் படுகிறதில்லையோ அந்த ஸ்திரீயும், எவளுடைய காலில் பெருவிரலுக்கு அடுத்த விரலானது, பெருவிரலைக்காட்டிலும்

நீண்டிருக்கிறதோ அந்த ஸ்திரீயும் விபசரிப்பவளும், மஹாபாபத்தைக் செய்கிறவளுமாகிருள்.

If the little toe or the one next to it do not touch the ground, or if the one next to the big toe be longer than the latter, she will be unchaste and very sinful. (16)

శ్లో॥ ఉద్బద్ధాభ్యాంపిండికాభ్యాంసిరాళేశుష్కేజంఘేరోమశేచాతిమాంసే।
వామావర్తంనిమ్నమల్పంచగుహ్యంకుంభాకారంచోదరందుఃఖితానాం॥౧౭॥

(சு-ம்) உத்பத்தாப்யாம் பிண்டிகாப்யாம் ஸிராளேஶுஷ்கே ஜங்கே ரோமஶே சாதிமாம்ஸே - வாமாவர்த்தம் நிம்னமல்பஞ்சகுஹ்யம் கும்பாகாரம் சோதரம் து:க்கிதானும்.

பதம்.	பொருள்.
உத்பத்தாப்யாம்	மேல் உருண்டையாக இருக்கப் பட்டவையான
பிண்டிகாப்யாம் (உபலக்ஷிதே	முழங்கால் கீழ்ப்புறத்திய மாம்ஸங்களோடு கூடியிருப்பவையும்)
ஸிராளே	நரம்புகளுள்ளவையும்
ஶுஷ்கே	உலர்ந்தவையும்
ரோமஶே	மயிர்களை யுடையவையும்
அதிமாம்ஸே	அதிக மாம்ஸங்களைப் பெற்றவையுமான
ஜங்கேச	முழங்காலின் கீழ்ப்புறங்களும்
வாமாவர்த்தம்	அப்பிரதக்ஷிணமான சுழியையுடையதும்
நிம்னம்	ஆழ்ந்ததும்
அல்பஞ்ச	அல்பமுமான
குஹ்யஞ்ச	யோனியும்
கும்ப	யானையினுடைய
ஆகாரம்	ரூபம்போன்ற ரூபமுள்ள
உதரஞ்ச	வயிறும்
துக்கதானும்	துக்கத்தையுடைய ஸ்திரீகளுக்கு
(பவந்தி	ஆகின்றன).

(பொ-ரை) மேலுருண்டையாக இருக்கப்பட்டவையான மாம்ஸத்தோடு கூடியிருப்பவையும், நரம்புபெருத்தவையும், உலர்ந்து மயிர்களையுடையவையுமாகிய ஜங்கை என்னும் முழங்காலின் கீழ்ப்புறங்களும், அப்பிரதக்ஷிணமான சுழியையுடையதும், ஆழ்ந்து சூக்ஷ்மமுமான யோனியும்

பானைபோன்ற வயிறும் ஆகிய இவைகள் துக்கப்படுகிற ஸ்திரீகளுக்கு ஆகின்றன.

Women afflicted with grief will have fleshy calves round at the head and covered with prominent blood vessels and dry hair, and a short vagina with hair turning from right to left and a pot like belly. (17)

శ్లో॥ హ్రస్వయాతినిస్స్వతాదీర్ఘయాకులక్షయః ।
గ్రీవయాపృథూత్థయాయోషితఃప్రచండతా ॥ ॥ ౧౮ ॥

(சு-ம்) ஹ்ரஸ்வயாதினிஸ்வதா திர்க்கயா குலக்ஷய:—க்ரீவயா ப்ருதுத்தயா யோஷித: ப்ரசண்டதா

பதம்.	பொருள்.
ஹ்ரஸ்வயா	குறுகியிருக்கிற
க்ரீவயா	கழுத்தினால்
அதினிஸ்வதா	மிகவும் தாரித்திரியமும்
திர்க்கயா	நீண்டிருக்கிற கழுத்தினால்
குலக்ஷய:	வம்சக்ஷயமும்
ப்ருதுத்தயா	ஸ்தூலமாகிய கழுத்தினால்
யோஷித:	ஸ்திரீக்கு
ப்ரசண்டதா	குரூரத்தன்மையும்
(பவந்தி	ஆகின்றன).

(பொ-ரை) ஸ்திரீகளுக்கு குறுகியிருக்கிற கழுத்தினால் மிகவும் தாரித்திரியமும், நீண்டிருக்கிற கழுத்தினால் வம்சக்ஷயமும், ஸ்தூலமாக உண்டாயிருக்கிற கழுத்தினால் குரூரஸ்வபாவமும் உண்டாகின்றன.

If the neck be short she will be poor; if it be long, she will be consumptive (a family disease); if large, she will have a bad temper. (18)

శ్లో॥ నేత్రేయస్యాఃకేకరేపింగళేవాసాదుశ్శీలాశ్యావవిలోక్షణాచ।
కూపౌయస్యాగండయోశ్చస్మితేషునిస్సంధిగ్ధంబంధకీంతాంవదంతి ॥ ౧౯ ॥

(சு-ம்) நேத்ரேயஸ்யா: கேகரே பிங்களே வாஸாதுஶ் ஶீலாஶ்யாவலீலேக்ஷணாச—கூபௌ யஸ்யாகண்டயோஶ்ச ஸ்மிதேகனிஸ் ஸந்திக்தம் பந்தகீம்தாம் வதந்தி.

பதம்.	பொருள்.
யஸ்யா:	எவளுடைய
நேத்ரே	கண்கள்

கேகரே	காய்ந்தவையும்
பிங்களேவா	பொன்னிறமுள்ளதாய்
(பவத:	ஆகின்றனவோ. அவளையும்)
யா	எவள்
ஸ்யாவநீல	கறுப்பும் மஞ்சளும் கலந்த நிறமுடையவை யான
ஈக்ஷணா	கண்களையுடையவளோ
தாஞ்ச	அவளையும்
ஸ்மிதேக	புன்னகைகளில்
யஸ்யா:	எவளுடைய
கண்டயோ	கபோலங்களில்
கூபௌ	பள்ளங்கள்
(பவத:	ஆகின்றவோ)
தாஞ்ச	அவளையும்
நிஸ்ஸந்திக்தம்(யதாததா)	ஸந்தேகமில்லாதபடி
பந்தகீம்	வியபிசாரம் செய்கிறவளென்று
வதந்தி	சொல்லுகின்றனர்.

(பொ-ரை) எவளுடையகண்கள்காய்ந்ததும், பொன்னிறமுமுள்ளதோ எவள் கறுப்பும், மஞ்சளுங்கலந்த நிறமுடையவையான கண்களைப் பெற்ற வளோ அவளையும், புன்னகைகளில் எவளுடைய கபோலங்களில் பள்ளங் கள் உண்டாகின்றனவோ அவளையும் சந்தேகமின்றியே வியபிசாரம் செய் கின்றவளாகச் சொல்லுகின்றனர்.

If the eyes be wild with the colour of a mixture of black and yellow, or if there be dimples in the cheeks while smiling she will be an adulteress. (19)

శ్లో॥ ప్రవిలంబని దేవరం లలాటే శ్వశురం హంత్యుదరే స్ఫిజౌ పతించ ।
అతిరోమచయాన్వితోత్తరోష్ఠీ నచభా భర్తురతీవయాచదీర్ఘా ॥ ॥ ౨౦ ॥

(சு-ம்) ப்ரவிலம்பனி தேவரம்லலாடே ஶ்வஶுரம் ஹந்த்யுதரே ஸ்பிஜௌ பதிஞ்ச—அதிரோமசயான் விதோத்த ரோஷ்டீன ஶுபாபர்த்துரதீவயாச தீர்க்கா.

பதம்.	பொருள்.
லலாடே	நெற்றியானது
ப்ரவிலம்பினஸதி	தொங்குமளவில்
தேவரஞ்ச	மைத்துனனையும்

உதரே	வயிறுனது
(ப்ரவிலம்பினஸதி	தொங்குமளவில்)
ஶ்வஶுரஞ்ச	மாமனாரையும்
ஸ்பிஜோ:	பிருஷ்டங்களின் அடிகள்
(ப்ரவிலம்பிதோஸ்ஸதோ: தொங்கியிருக்குமளவில்)	
பதிஞ்ச	பர்த்தாவையும்
ஹந்தி	கொல்லுகிறுள்
அதி	அதிகமான
ரோம	மயிர்களால்
சய	கும்பலாகி
அன்வித	கூடியிருப்பவையான
உத்தரோஷ்டீ	மேல்கீழுதடுகளையுடையவளும்
பர்த்து	பதியைக்காட்டிலும்
யா	எவள்
அதிதீர்க்க	மிகவும் உயரமான
ஸாச	அவளும்
ஶுபா	சுபலக்ஷணமுடையவளல்லள்

(பொ-ரை) நெற்றியானது தொங்கியிருக்குமளவில் மைத்துனனையும், வயிறு வணங்கித்தொங்குமளவில் மாமனாரையும், பிருஷ்டத்தின் அடிப்பாகங்கள் தொங்கியிருக்குமளவில் பதியையும் கொல்லுகிறுள். அதிக மயிர்களடர்ந்த மேல்கீழுதடுகளை யுடையவளும், பதியைக்காட்டிலும் மிகவும் நீண்டிருப்பவளும் சுபலக்ஷண முடையவளல்லள்.

If the forehead be low, her husband's brother will die ; if her belly is bent and hang, her father-in-law will die ; if the buttocks appear to hang, her husband will die ; if the upper and lower lips be hairy, and if be taller than her husband she will bring woe to him.

శ్లో॥ స్తనౌసరోమౌమలినౌల్బణౌచక్లేశందధాతేవిషమౌచకర్ణౌ ।
స్థూలాఃకరాళావిషమాశ్చదంతాఃక్లేశాయచౌర్యాయచకృష్ణమాంసాః॥ ౨౧॥

(சு-ம்) ஸ்தனௌ ஸரோமௌ மலினௌல்பணௌசக்லேஶந்ததாதே விஷமௌ சகர்ணௌ — ஸ்தூலா:காரளா விஷமாஶ்சதந்தா: க்லேஶாயசௌர்யாயச க்ருஷ்ணமாம்ஸா:.

பதம்.	பொருள்.
ஸரோமௌ	மயிர்களோடு கூடியவையும்
மலின	அழுக்கடைந்தவையும்

உல்பணௌ	பிரஸித்தங்களானவையும்
விஷமௌ	ஒன்றுக்கொன்றொவ்வாத
ஸ்தனௌச	ஸ்தனங்களும்
கர்ணௌச	செவிகளும்
க்லேஶம்	துக்கத்தை
தத்தே	செய்கின்றன
ஸ்தூலா:	பருத்து
கராளா:	அழகில்லாது
விஷமாஶ்ச	ஒழுங்கற்ற
க்ருஷ்ணமாம்ஸ:	கறுத்த மாம்ஸம் பொருந்திய
தந்தா:	பற்கள்
க்லேஶாய	துக்கத்திற்காகவும்
சௌர்யாயச	திருட்டுத்தன்மையுள்ள ஸ்திரீகளுக்கு
(பவந்தி	ஆகின்றன).

(பொ - ள்) மயிர்களோடுகூடி, அழுங்கடைந்து, பிரகாசமாகி, ஒன்றுகொன்றொவ்வாத ஸ்தனங்களும், அவ்விதமாகிய செவிகளும், துக்கத்தைத் தருகின்றனவாம்; பருத்து, அழகற்று, ஒழுங்கில்லாத கறுத்தமாம்ஸம் பொருந்திய பற்கள், துக்கம், திருட்டுத்தனமுள்ள ஸ்திரீகளுக்கு, உண்டாகின்றன.

If the breasts be covered with hair, dirty, glossy and unequal and if the ears also are like them, she will suffer grief. If the teeth be large, unequal and of a disagreeable appearance and if the gums be black, she will be sorrow-stricken and addicted to stealing. (21)

శ్లో॥ క్రవ్యాదరూపైర్వృకకాకకఙ్కసరీసృపాలూకసమానచిహ్నైః ।

శుష్కైశ్శిరాలైర్విషమైశ్చహస్తైర్భవంతినార్యస్సుఖవిత్తహీనాః ॥ ॥౨౨॥

(சு-ம) க்ரவ்யாதரூபை ர்வ்ருககாககங்க ஸரீஸ்ருபாலூகஸமான சின்னைஹ:- ஶுஷ்கைஶ்ஶிராளைர் விஷமைஶ் சஹஸ்தைர் பவந்திநார்யஸ் ஸுக வித்தஹீனா:.

பதம்.	பொருள்.
க்ரவ்யாதரூபை:	ராக்ஷஸரூபத்தையுடையவையும்
வ்ருக	செந்நாய்

காக	காக்கை
கங்க	கழுகு
ஸரீஸ்ருப	சர்ப்பம்
உலூக	கோட்டான் (இவைகளோடு)
ஸமான	சரியானவைகளுமான
சின்ஹை	அடையாளங்களை யுடையவையும்
ருக்ஷை:	உலர்ந்தவையும்
ஸிராஸம்ச	நரம்புகளால் வியாபித்தவையும்
விஷமை	ஒழுங்கற்ற
ஹஸ்தை:	கைகளோடு
(உபலக்ஷிதா	கூடினவர்களான)
நார்ய:	ஸ்திரீகள்
ஸுக	சுகம்
வித்த	தனம் (இவைகளால்)
ஹீநா:	குறைந்தவர்களாக
(பவந்தி	ஆகின்றனர்).

(பொ - ள்) ராக்ஷஸரூபங்களை யுடையவையும், செந்நாய், கழுகு, கோட்டான், சர்ப்பம் ஆகிய இவைகளோடு சரியானவையுமான ரேகைகளுள்ள உலர்ந்து நரம்புகளால் வியாபிக்கப்பட்ட, ஒன்றுக்கொன்றுவ் வாதகைக ளோடுகூடிய ஸ்திரீகள், சுகம், செல்வம் இவைகளில்லாதவர்களாகின்றனர்.

If the lines in the hand be huge and ugly, or of the shape of the wolf, the crow, the eagle, the serpent, the heron and if the hands be dry, covered with unlike lines she will be devoid of comfort and of health. (22)

శ్లో॥ యాతూత్తరోష్ఠేన సమున్నతేన రూక్షాగ్రకేశా కలహప్రియా సా ।
ప్రాయోవిరూపాను భవంతిదోషాః యత్రాకృతి స్తత్రగుణావసంతి ॥ ౨౩ ॥

(சு - ம்) யாதூத்த ரோஷ்டேன ஸமுன்னதேன ரூக்ஷாக்ரகேசா கலஹப்ரியா ஸா—ப்ராயோவிரூபாஸு பவந்தி தோஷா: யத்ராக்ருதிஸ்தத்ர குணாவஸந்தி.

பதம்.	பொருள்.
யா	எவள்
ஸமுன்னதேன	உயர்ந்ததான
உத்தரோஷ்டேன	மேலுதட்டோடு
(யுக்தா	கூடினவளும்)

ரூக்ஷ	மழமழப்பில்லாததுமான
அக்ரகேஶா	நுனிமயிரையுடைய
ஸா	அவளும்
கலஹப்ரியா	கலகத்தில்பிரீதியுடையவள்
விருபாஸு	விகாரரூபமுடையஸ்திரீகளிடத்தில்
தோஷா:	தோஷங்கள்
ப்ராய:	வெகுவாக
பவந்தி	உண்டாகின்றன
யத்ர	எவளிடத்தில்
ஆக்ருதி:	சுந்தரமான ஆகாரமானது
(அஸ்தி	இருக்கிறதோ)
தத்ர	அவளிடத்தில்
குணா:	குணங்கள்
பவந்தி	உண்டாகின்றன.

(பொ-ரை) எந்தஸ்திரீயானவள் உயர்ந்த மேலுதடோடு கூடினவளும், மழமழப்பில்லாத நுனிமயிர்களை யுடையவளு மாகிறாளோ அவள்கலகத்தில் பிரீதி உடையவள், விகாரரூபமுடைய ஸ்திரீகளிடத்தில் வெகுவாக தோஷங்கள் உண்டாகின்றன; எவளிடத்தில் நல்லரூபம் இருக்கிறதோ அவளிடத்தில் நல்லகுணங்களு மிருக்கின்றன.

If the upper-lip be high, and if the end of the hair be not smooth, she will be quarrelsome. Vice generally accompanies deformities of the body, virtue and beauty. (23)

శ్లో॥ పాదౌసగుల్ఫౌప్రథమంప్రదిష్టౌజంఘేద్వితీయంచసజానుచక్రే ।
మేఢ్రోరుముష్కంచతతస్తృతీయంనాభిఃకటిశ్చేతిచతుర్థమాహుః ॥ ౨౪ ॥

(சு-ம்) பாதௌ ஸகுல்பௌ ப்ரதமம் ப்ரதிஷ்டௌ ஜங்கேத்விதீயஞ்ச ஸஜானு சக்ரே—மேட்ரோரு முஷ்கஞ்ச ததஸ்த்ரதீயம் நாபி: கடிம்சேதி சதுர்த்தமாஹு:.

பதம்.	பொருள்.
ஸகுல்பௌ	கணுக்கால்களோடு கூடியவையான
பாதௌ	பாதங்கள்
ப்ரதம	முதலில்
ப்ரதிஷ்டௌ	உத்தேசிக்கப்பட்டன
ஜங்கே	முழங்கால் கீழ்ப்புறங்கள்
ஸஜானுசக்ரே	முழங்கால் குண்டுகளோடு கூடியவை

த்விதீயஞ்ச	இரண்டாவதாக
(ஸமுத்திஷ்டம்	உத்தேசிக்கப்பட்டன)
தத:	பின்பு
மேட்ர	சிசனம்
ஊரு	தொடைகள்
முஷ்கஞ்ச	விருஷணம் (இவைகளும்)
த்ரதீயம்	மூன்றாவதாகவும்
நாபி:	நாபியும்
கடிஶ்ச	இடையும்
சதுர்த்தமதி	நான்காவதென்று
ஆஹு:	சொன்னார்கள்.

(பொ - ரை) கணுக்கால்களோடு கூடிய பாதங்கள் முதலிலும், முழங்கால் கீழ்ப்புறங்களும், முழங்கால்களும் இரண்டாவதாகவும், பின்பு சிசனம், தொடைகள், விருஷணம் இவைகள் மூன்றாவதாகவும், தொப்புள், இடை இவைகள் நான்காவதாகவும் சொல்லப்பட்டன.

The feet including the ankles were first described, then (2) the knees and the shanks, (3) the genital organ, the thighs and (4) the navel, the waist. (24)

శ్లో॥ ఉదరంకథయంతిపంచమంహృదయంషష్ఠమథ స్తనాన్వితం ।
అథసప్తమమంసజంత్రుణీకథయంత్యష్టమమోష్ఠకంధరే ॥ ॥ ౨౫ ॥

(சு-ம்) உதரங்கதயந்திபஞ்சமம் ஹ்ருதயம் ஷஷ்டம தஸ்தனான்விதம்—அத ஸப்தமமம்ஸ ஜந்த்ருணீகத யந்த்யஷ்டம மோஷ்டகந்தரே.

பதம்.	பொருள்.
உதரம்	வயிற்றை
பஞ்சமம்	ஐந்தாவதாகவும்
அத:	பின்பு
ஸ்தனான்விதம்	ஸ்தனங்களோடுகூடிய
ஹ்ருதயம்	மார்பை
ஷஷ்டம்	ஆறாவதாகவும்
கதயந்தி	சொல்லுகின்றனர்
அத	பின்பு
அம்ஸ	தோள்கள்
ஜந்த்ரு	தோள்கழுத்துகளின் ஸந்தி (இவைகளை)
ஸப்தமம்	ஏழாவதாகவும்

ஓஷ்ட	உதடுகள்
கந்தரா	கழுத்து (இவைகளை)
அஷ்டமம்	எட்டாவதாகவும்
கதயந்தி	சொல்லுகின்றனர்.

(பொ-ளை) வயிற்றை ஐந்தாவதாகவும், ஸ்தனங்களோடு கூடியமார்பை ஆறுவதாகவும், தோள்களையும், தோள் கழுத்துகளின் சந்திகளையும் ஏழாவதாகவும், உதடுகள், கழுத்து இவைகளை எட்டாவதாகவும் சொல்லுகின்றனர்.

Then fifthly was described the belly, (6) the chest with the breasts, (7) the shoulders and the joints found therein, (8) the lips and the neck. (25)

శ్లో॥ నవమంనయనేచసభ్రూణీసలలాటందశమంశిరస్తథా ।
అశుభేష్వశుభంవశాఫలంచరణాద్యేషు శుభేషుశోభనం ॥ ॥ ௨௬ ॥

(சு-ம்) நவமம்நயனேச ஸப்ருணீஸ லலாடந்தமமம் ஶிரஸ்தத்தா - அஶு பேஷ்வஶுபந்தஶா பலஞ்சரணாத்யேஷு ஶுபேஷு ஶோபனம்

பதம்.	பொருள்.
ஸப்ருணீ	புருவங்களோடு கூடியவைகளான
நயனே	கண்களை
நவமம்	ஒன்பதாவதாகவும்
ஸலலாடம்	நெற்றியோடுகூடிய
ஶிர:	தலையை
ததா	அப்படி
தஶமம்	பத்தாவதாகவும்
(கதயந்தி	சொல்லுகின்றனர்)
சரண	கால்களை
ஆத்யேஷு	முதலாக உடைய்வையான
அங்கேஷு	அவயவங்கள்
அஶுபேஷுஸத்ஸு	அசுபலக்ஷணங்களைப் பெற்றிருந்தவையாகில்
தஶாபலம்	தசையின் பலமானது
அஶுபம்	அமங்கள கரமாக
(பவதி	ஆகிறது
தேக	அந்த அவயவங்கள்
ஶுபேஷுஸத்ஸு	லக்ஷணங்களால் சுபங்களாயிருக்குமளவில்
தஶாபலம்	தசையின் பலமானது
ஶுபம்	சுபகரமாக
(பவதி	ஆகிறது).

(பொ - ரை) புருவங்களோடுகூடிய கண்கள் ஒன்பதாகவாகவும் நெற்றியோடுகூடியதலையைப் பத்தாவதாகவும் சொல்லுகின்றனர். இந்த பாதந்தொடங்கியுள்ள அவயவங்கள் பத்தும் அசுபலக்ஷணங்களைப் பெற்றிருக்கில் அசுபமானபலமும், சுபலக்ஷணங்களைப் பெற்றிருக்கில் சுபமானதசையும், சுபமான பலமும் உண்டாகும்.

The eyes with the brows were described in the 9th place, (10) the head and forehead. If any of these 10 parts above the soles of the feet have features not commendable, there will be no happiness and if otherwise happiness. (26)

శ్లో॥ ఇతిశ్రీవరాహమిహిరకృతౌబృహత్సంహితాయాం స్త్రీలక్షణం ।
నామసప్తతితమోధ్యాయః ॥

இதிஸ்ரீவராஹ மிஹிரக்ருதௌ ப்ருஹத்ஸம் ஹிதாயாம்
ஸ்திரீலக்ஷணம் நாமஸப்ததித மோத்யாய:.

ஸ்ரீவராஹமிஹிரர் இயற்றிய பிருஹத்ஸம்ஹிதையில் ஸ்திரீ
லக்ஷணத்தைச் சொல்லுகிறதான எழுபதாவது அத்தியாயம் முற்றிற்று.

The 70th chapter treating of the features of women in the Brihat Samhita by Sree. Varaha Mihira is finished.

ஸ்த்ரீலக்ஷணம் - முற்றிற்று.

உ

ஓம் பரப்ரம்ஹணே நம:

புருஷ ஸாமுத்திரிகம்

ஸ்ரீ சிவசுப்ரம்ஹண்யக்கடவுள்

அகஸ்தியருக்குத் திருவாய்மலர்ந்தருளிய

சாமுத்திரிகா லக்ஷண நூல்

புருஷனால் ஜன்மாந்தரத்தில் செய்யப்பட்டிருந்த நல்வினை தீவினைகள் எந்த அடையாளத்தினால் காணப்படுகின்றனவோ அவைலக்ஷணமென்னப்படும்.

லக்ஷணம் பாஹ்யமென்றும் ஆந்திரமென்றும் இருவகைப்படும்.

வர்ணம் ஸ்வரம் இவை முதலாக உடைய லக்ஷணமானது பாஹ்யமாகும்; என்றால்:—வெளியிலுள்ளது.

பலம், ஸ்வபாவம் இவை முதலாக உடைய லக்ஷணமானது ஆந்திரமாகும்; என்றால்:—உள்ளடங்கியது.

புருஷர்களுக்குச் சரீரலக்ஷணம்:—சுழி, நடை, காந்தி, ஸ்வரம், வர்ணம், கந்தம், ஸத்வம் என்று இவ்வெட்டும் முக்கியமானவை. புருஷருடைய சரீரலக்ஷணம் அறிகின்ற முக்கியவிதம் எவ்வாறெனில்:—

உள்ளங்கால், அதின் ரேகைகள், பெருவிரல், மற்றவிரல்கள், நகம், புறங்கால், கணுக்கால், குதிக்கால், கீழ்க்கால், முழங்கால், மயிர், தொடை, இடுப்பு, புருஷ்டம், குதம், பீஜம், ஆண்குறி, ஸினத்தின்முனை, சுக்கிலம், சிறுநீர் அல்லது மூத்திரம், நாபியின் கீழ்ப்புரம், நாபி, குக்ஷி, இரண்டுபக்கங்கள், வயிறு, இடை, சதைமடிப்பு, இதயம், மார்பு, முலைநுனிகள், தோள்சந்திகள், தோள், தோள்சிகரம், அக்குள், புஜம், கை, மணிக்கட்டு, புறங்கை, உள்ளங்கை, அதின் ரேகைகள், பெருவிரல், மற்றவிரல்கள், நகம், முதுகு, பிடரி,

கழுத்து, மோவாய்க்கட்டை, மீசை, தவடை, கன்னம், முகம், உதடு, பல், காவு, தவடையினுட்புறம், உள்நா, மூக்கு, தும்மல், கண், இமைமயிர், இமைகொட்டுதல், அழுகைமுகம், புருவம், நெற்றி, செவி, நெற்றியின் ரேகைகள், தலை, தலைமயிர், என்றிவ்விதமாக முக்கியமானதும், முக்கியமல்லாததும் ஆகிய அங்கங்கள் இவையென்று அறியக்கடவன.

புருஷருக்கமைந்த இலக்ஷணங்கள் பலவாயினும், அவற்றுள் சிறந்தவை முப்பத்திரண்டாம்; அவையாவன:—

ஐந்து இடம் நீண்டும், ஐந்து மிருதுவாயும், ஆறு உயர்ந்தும், ஏழு சிவந்தும், மூன்று விசாலமாயும், மூன்று குறுகியும், மூன்று தாழ்ந்தும் இருக்கவேண்டும்.

நீண்டு இருக்கவேண்டிய ஐந்து இடங்களாவன:—கண் கை, கதுப்பு, முழங்கால், மூக்கு இவைகளாம். மிருதுவாய் இருக்கவேண்டிய ஐந்து இடங்களாவன:—மயிர், விரல், நகம், தோல், பல் இவைகளாம். உயர்ந்துஇருக்கவேண்டிய ஆறுஇடங்களாவன:—நெற்றி, தோள், வயிறு, அக்குள், மார்பு, புறங்கை இவைகளாம். செவந்திருக்கவேண்டிய ஏழிடங்களாவன:—கடைக்கண், உள்ளங்கை, நகம், வாய், ஆண்குறி, உள்ளங்கால், உதடு இவைகளாம். விசாலமாய் இருக்கவேண்டிய மூன்றிடங்களாவன:—மார்பு, பீஜங்கள், இவைகளாம். குறுகி இருக்கவேண்டிய மூன்றிடங்களாவன:—கழுத்து, முழங்காலின் கீழ், ஆண்குறி இவைகளாம். தாழ்ந்திருக்கவேண்டிய மூன்றிடங்களாவன:—நடுமார்பு, நெற்றியின் கீழ்ப்பாதி, உந்தி இவைகளாம். இந்த இலக்ஷணங்கள் சிறிதேனும் குறைவின்றி அமையப்பெற்றவன் இராஜனாவான்.

மற்றையபடிச் சாதாரணமாய் அவரவருக்குரிய விலக்ஷணங்களையும், அவற்றின் பலன்களையும் பின்விவரிப்பதனாலறிக.

I. தலை.

எண்.	உருவம்.	பயன்.
1.	யானையின் கும்பஸ்தலம், விரிந்த குடை, மங்கையின் கொங்கை இவைபோன்றிருந்தால்,	அரசு அல்லது இராஜரீகம்.
2.	வட்டமாகப் பருத்திருந்தால்,	பசுவிருத்தி.
3.	வட்டமாகச் சிறுத்திருந்தால்,	அழகு, செல்வம்.
4.	மண்டை ஓடு ஒருபக்கத்திற்கொருபக்கம் ஒவ்வாதிருந்தால்	தரித்திரம்.
5.	நீண்டும், எலும்புபருத்துமிருந்தால்,	தீர்க்காயுசு.
6.	தட்டையாயிருந்தால்,	துக்கம் தாய் தந்தையுடைமை

எண்.	உருவம்.	பயன்.
7.	இரட்டைத்தலையாயிருந்தால்,	தனமில்லாமை,பாபபுத்தி
8.	பீன்தலையையொத்திருந்தால்,	மிகுந்ததுக்கம்.
9.	பானைபோன்றிருந்தால்,	அதர்மத்தில் பிரியம்.
10.	அதிகமாகவணங்கியிருந்தால்,	பரநிந்தை.

II. தலைமயிர்.

1.	பருத்துக் கறுத்திருந்தால்,	செல்வம்.
2.	பருத்துச்செவந்திருந்தால்,	வறுமை.
3.	யானைமயிர்போன்றிருந்தால்,	நோய், செல்வம்.
4.	நெருங்கிய மயிரிருந்தால்,	தீர்க்காயுசு.
5.	சிறுத்துச்செவந்திருந்தால்,	அதிககாமம்.
6.	சுருண்டமயிரிருந்தால்,	விகாரம், சொற்பசெலவு.
7.	மிகவும் நீண்டமயிரிருந்தால்,	அதிகபழிக்குரிமை.
8.	நுனியில் பிளவாமல் மழமழப்பாய்க் கறுத்து மிருதுவாகிச் சரியாக அதிக நீண்டு, வெகுவாய் அலையையொத்த மடிப்புகளைப்பெற்றிருந்தால்,	இராஜரீகம்.
9.	குறுகி மழமழப்பில்லாமல் பிளவுற்ற நுனியுள்ளதாயும் பொன்னிறமாய் ஒன்றோடொன்று சரியாகாமல் அதிக கோணியும், நீண்டும், ஜடைபற்றியும், விலகியு மிருந்தால்.	தரித்திரம்.

III. தலையின் சுழி.

1.	தலைமத்தியில் ஒருசுழி வலமாக இருந்தால்,	மிகுதியானசெல்வம்.
2.	இடத்தில் ஒருசுழி இருந்தால்,	வறுமை.
3.	இரண்டு சுழி இடம் புரியாயிருந்தால்,	ஆயுள்பரியந்தம் வறுமை.
4.	இடதுபுறத்தில் வலஞ்சுழி இருந்தால்,	பூர்ணாயுசு.
5.	வலத்தில் ஒருசுழி வலம்புரியாயிருந்தால்,	மிகுந்த சம்பத்து.
6.	இடதுபுறத்தில்மூன்றுசுழி இடம்புரியாக இருந்தால்,	தந்தைதாயர்களை இழத்தல்.

எண்.	உருவம்.	பயன்.
7.	மூன்றுசுழி இடம்புரியாகத் தெங்குகண்போற் கூடியிருந்தால்,	வெட்டுப்படுதல்.
8.	ஒரு சுழி வலம்புரியும், ஒருசுழி இடம்புரியுமாயிருந்தால்,	சிறிது நாள் வறுமை, சிறிதுநாள் செலவம்.

IV. முகம்.

1.	சிங்கம், யானையைப்போன்று மூடியவாயும், பரிசுத்தம், மெல்லியதும்,மழமழப்பும்அழகாயும், உயர்ந்ததுமாய் இருந்தால்,	அரசு, அல்லது இராஜரீகம்.
2.	தாயைப்போன்றிருந்தால்,	புண்ணியம்
3.	நீண்டும்,விசாலமாயும்,கோணியும், உயர்ந்தும், சதைமடிப்பும், குதிரைமுகம் போன்றிருந்தால்,	தரித்திரம்.
4.	பெண்முகமாயிருந்தால்,	பிள்ளையில்லை, பாபி.
5.	நாற்சதுரமாயிருந்தால்,	மூர்க்கத்தன்மை, சீலமின்மை, மோசம்.
6.	குறுகியிருந்தால்,	உலோபகுணம்.
7.	வட்டமாயிருந்தால்,	மிகுந்தபாக்கியம்.
8.	கழுதை, ஒட்டகம் ,குரங்கு, புலி போன்றிருந்தால்,	தூக்கம்.
9.	சிறிதாயிருந்தால்,	அழகு.
10.	பருத்துக் கறுத்து மிகுந்தமயிரிருந்தால்,	வசிகரம், செல்வம்.
11.	மிருதுவான மயிரிருந்தால்,	அழகு.
12.	மயிர்நெருங்கி யிருந்தால்,	க்ாமம்.
13.	அற்பமயிரிருந்தால்,	ஸ்திரீபோகம்.

V. முகத்தின் சுழி.

1.	முகத்தின் வலத்தில் ஒரு சுழி வலம்புரியா யிருந்தால்,	சுகபோஜநம்.
2.	இடத்தில் ஒருசுழி இடம்புரியாயிருந்தால்,	சிலநாள் வறுமை, சிலநாள் செல்வம்.
3.	இடத்தில் வலம்புரி சுழி இருந்தால்,	நல்ல நினைப்பு, நினைத்தது முடியாமை.

எண்.	உருவம்.	பயன்.
4.	தாள்வாயின் கீழே இரண்டு சுழி வலம் புரியாயிருந் தால்,	அதிக செல்வம்.
5.	இடம் புரியாயிருந்தால்,	வறுமை, வியாதி.

VI. நெற்றி.

1.	விசாலமாயிருந்தால்,	செல்வம்.
2.	உயர்ந்து, மூன்றும் பிறைச் சந்தி ரன் போன் றிருந்தால்,	ராஜ்ஜியம்.
3.	முத்துச்சிப்பிபோல்அகன் றிருந்தால்	ஆசார்யபக்தி.
4.	குறைந்திருந்தால்,	தருமத்தில்சிரத்தை.
5.	சுருங்கியும்,மேடுபள்ளமாயுமிருந் தால்,	தனமில்லாமை.
6.	பள்ளமாயிருந்தால்,	போகமின்மை, கொலை, பாவம், சிறை.
7.	நரம்புஎழும்பியிருந்தால்,	அதமம்.
8.	முக்கோணம்போன்ற ரேகையிரு ந்தால்,	தனம்.
9.	ஐந்துரேகை யிருந்தால்,	தீர்க்காயுசு, லக்ஷ்மி கடாக்ஷம்.
10.	நான்குரேகைகளிருந்தால்,	எண்பதுவயசு, அரசு.
11.	மூன்றிருந்தால்,	எழுபது வயசு.
12.	இரண்டிருந்தால்,	அறுபது வயசு.
13.	ஒன்றிருந்தால்,	நாற்பது வயசு.
14.	ரேகையில்லாதிருந்தால்,	இருபத்தைந்துவயசு, சகலசெல்வம்.
15.	குறுக்காகிய மூன்று ரேகைகள் நீண்டிருந்தால்,	நூறுவயசு.
16.	குறுக்காகிய நான்குரேகைகள் நீண்டிருந்தால்,	தொண்ணூற்றைந்து வயசு, விசேடபூமி.
17.	ரேகைகளோடிருந்தால்,	தொண்ணூறுவயசு.
18.	தலைமயிர்வளையில் நீண்டரேகை யிருந்தால்,	எண்பதுவயசு.
19.	குறுக்காகிய ஐந்துரேகைகளிருந் தால்,	எழுபது வயசு.
20.	குறுக்காகிய ஆறு ரேகைக ளிருந் தால்,	அறுபது வயசு.
21.	வெகு ரேகைகளிருந்தால்,	ஐம்பது வயசு.

எண்.	உருவம்.	பயன்.
22.	கோணிய ரேகைகளிருந்தால்,	நாற்பது வயசு.
23.	புருவங்களைச்சேர்ந்தாப்போலிருக்கிற ரேகைகளிருந்தால்,	முப்பது வயசு.
24.	இடதுபக்கத்தில் கோணி இருப்பவையானரேகைகளால்,	இருபது வயசு.
25.	ரேகைகளறுந்தவையாயிருந்தால்	புணரத்தகாத மாதரைப் புணருதல்.
26.	ஸ்ரீவர்ஸம், தனுஸ்ஸு போன்றரேகைகளால்,	அரசு.
27.	நான்கு விரலக்லகலமிருந்தால்,	ஞானம்.
28.	மூன்று விரலகலமிருந்தால்,	ஞானம். செல்வம்.
29.	இரண்டு விரலகலமிருந்தால்,	அதிகசெல்வம்.
30.	ஒரு விரல்கலமிருந்தால்,	மூடத்தன்மை.

VII. நெற்றியின் சுழி.

1.	நெற்றி நடுவிலொரு சுழி வலம்புரியா யிருந்தால்,	செல்வம்.
2.	இடம்புரியாயிருந்தால்.	வறுமை.
3.	முன்நெற்றியில் இடமாக ஒரு சுழி இருந்தால்,	தாய், தந்தைகள் விரைவில் இறந்துவிடுவர்.
4.	இரண்டு சுழி வலமா யிருந்தால்,	காம்விகாரம், பாபம்.
5.	நெற்றியில் மயிர் அதிகமாக விருந்தால்,	மிருந்தகபடம்.

VIII. புருவம்.

1.	நாசிகையென்னும்மூங்கிலில் இருந்து உண்டான இலைகள் போன்று, இளம்பிறைபோலச்சாய்ந்து, ஒன்றோடொன்று கூடாமல், மிருதுவான மயிர்களோடும் மழமழப்பாயிருந்தால்,	அதிக செல்வம்.
2.	நீண்டு, மிகவும் கறுத்து, விசாலமான கண்களைப் பெற்றிருந்தால்,	சுகம்.
3.	ஸ்தூலமாயும், அற்பமாயும், குரூரமாயும், பொன்னிறம் பெற்றும், துண்டுதுண்டாயிருந்தால்,	தரித்திரம்.

எண்.	உருவம்.	பயன்.
4.	குறுகியிருந்தால்,	அதிகதுக்கம்.
5.	நடுவில் வளைந்திருக்குமாகில்,	புணரத்தகாத மாதரைப் புணருதல்.
6.	மிகவுயர்ந்து அதிகவளைவா யிருக்குமாயின்,	அற்பாயுசு.
7.	கூட்டுப் புருவமாயிருந்தால்,	தாய்தந்தைகளை விரைவிலிழப்பர்.

IX. கண்.

1.	கமலம்போன்ற கண்களிருந்தால்,	அரசு.
2.	முத்துப்போல்வெளுத்திருந்தால்,	சிறந்த சாஸ்திரஞானம்.
3.	தேன், பொன், கோரோசனை இவைகள் போன்றிருந்தால்,	அதிகதநம்.
4.	யானையின் கண்போன்றிருந்தால்,	சேநாதிபத்தியம்.
5.	நீண்டிருந்தால்,	சிரஞ்ஜீவி.
6.	விசாலமாயிருந்தால்,	மஹாபோகம்.
7.	மாடப்புறுவினைப் போன்றிருந்தால்,	மிகுந்தகாமம்.
8.	கறுப்புமஞ்சள் கலந்திருந்தால்,	நல்லபாக்கியம்.
9.	பருத்தகண்களை யுடைத்தாயிருந்தால்,	விசேஷபுத்தி.
10.	ஈனமாயிருந்தால்,	தரித்திரம்.
11.	கிளி, மயில், இவைகளின் கண் போன்றிருந்தால்,	மத்திமம்.
12.	தவளையைப்போன்றிருந்தால்,	அதமம்.
13.	புகைபோன்றிருந்தால்,	தீர்க்காயுசு.
14.	உருண்டும், அசைவற்றுமிருந்தால்,	யௌவநத்தில் மரணம்.
15.	நேர்பார்வையா யிருந்தால்,	நிஷ்களங்கம்.
16.	மேற்பார்வையாயிருந்தால்,	புண்ணியம்.
17.	கீழ்பார்வையா யிருந்தால்,	பாவம்.
18.	குறுக்குப்பார்வையா யிருந்தால்,	கோபம்.
19.	எப்போதும் ஒருகுறியைப்பற்றுததாகிக்காரணமின்றிச்சுழலுகிறதும், வாடினதும்,குரூரமும்ஆகியும்,பூனைக்கண்ணுயுமிருந்தால்,	பாவத்தொழில்.
20.	பொட்டைக்கண்ணு யிருந்தால்,	அதமம், கொடுமை.

எண்.	உருவம்.	பயன்.
21.	காய்ப்புண்டிருந்தால்,	அதமாதமம்.
22.	குரூரமாயிருந்தால்,	ஜநங்களுக்குபயம்.
23.	கோழிக்கண்ணுயிருந்தால்,	துஷ்டத்தனம்.
24.	பாம்புகண்ணுயிருந்தால்,	கண்ணோய்.
25.	ஒருகண்பெரிதும், ஒருகண் சிறிதுமா யிருந்தால்,	துக்கம்.
26.	ஹம்ஸத்தைப்போன் றிருந்தால்,	தநஹாநி.
27.	புலியையொத்தகண்ணுனல்,	கோபம்.
28.	அதிகக்கறுத்த கண்ணுயிருந்தால்,	சேதம்.
29.	அதிக மழமழப்புடைய கண்ணுயிருந்தால்,	அற்பாயுசு.
30.	விகாரவர்ணமும், சுழல்கிறது மாறுல்,	அசுபம்.
31.	மிகவும்சிவந்து மிகக்கொடிதாகி, ஜலத்தோடு கூடியிருந்தால்,	தரித்திரம்.
32.	ஆழ்ந்தகண்ணுகில்,	செல்வம்.

X கண்மச்சம்.

1.	வலதுகண்ணின் வெள்ளைவிழியில் மச்சமிருந்தால்,	புத்திகூர்மை.
2.	இடதுகண்ணின் வெள்ளைவிழியில் மச்சமிருந்தால்,	காமவிகாரம்.
3.	பிறவிக்குருடாயிருந்தால்,	மனக்குறை,
4.	விழிக்கண் குருடாயிருந்தால்,	விஸேஷித்த அறிவு.

XI மூக்கு.

1.	நாலங்குலமுள்ளதும், மிகப்பருத் நுனியையுடையதும், குறுகிய உள் ரந்த்ரங்களைப் பெற்றதும், மிகப் பருத்தசதைமடிப்புஇல்லாததுமாயிருந்தால்,	தீர்க்காயுசு, மிகுந்தசுகம்.
2.	நேராயும், உயர்ந்துமிருக்கில்.	நல்லபாக்கியம்.
3.	யானையின்துதிக்கைபோன்றதாகில்,	சுகம், தநம்.
4.	எள்ளின் பூவையும், கிளிமூக்கையும் ஒத்திருந்தால்,	அரசு.
5.	நுனியில் கோணியிருந்தால்,	தனம்.
6.	சிறுமூக்காஞல்,	சீலம், தர்மம்.

எண்.	உருவம்.	பயன்.
7.	விசாலமாகிஉயர்ந்து,புள்ளாங்குழலை யொத்திருந்தால்,	மிகுந்த ஐஸ்வர்யம்.
8.	இரண்டாகப் பிரிந்திருக்கிற நுனிப்புறத்தை யுடையதும், மிக நீண்டதும், மிகக்குறுகியதுமாயிருந்தால்,	தரித்திரம்.
9.	கோணியிருந்தால்,	சூரத்தன்மை.
10.	தட்டையாயிருந்தால்,	ஸ்திரீயினுல் மரண
11.	அறுந்த மூக்குபோன்றிருந்தால்,	புணரத்தகாத ம புணர்தல்.
12.	விகாரமானதும்,நடுப்புரமில்லாமல் நுனியில் பருத்ததும், பிசினுடையதுமாயிருந்தால்,	மிகுந்ததுக்கம்.
13.	வலதுபுறத்தில் பள்ளமாயிருந்தால்,	பிராணனம்புசித்தல், மிகக்கொடுமை.

XII. மூக்கின் மச்சம்.

1.	மூக்குமுனையில் மச்சம் இருந்தால்,	சொற்பசெலவு.
2.	வலத்தில் மச்சமிருந்தால்,	செல்
3.	இடத்தில் மச்சமிருந்தால்,	வறுமை
4.	மூக்கில்வடு இருந்தால்.	வெகுசெல்வம்.

XIII. வாய்.

1.	வாய் சிறுத்தால்,	செல்வம்.
2.	வாயினிடமாக மருவிருந்தால்,	பிடித்ததைசாதித்தல்.
3.	மரு சிவந்தால்,	அழகு.
4.	மரு கறுத்தால்,	வறுமை.
5.	வாய்க்குள் சுவேதையிருந்தால்,	ஞானம்.
6.	கமலமிருந்தால்,	வித்தை.
7.	குடையும், அங்குசமிருந்தால்,	அரசு.
8.	பாம்புபோன்றிருந்தால்,	வறுமை, கபடம்,
9.	வார்த்தை வலுவானுல்,	முன்கோபம், கபடில்லை.
10.	வார்த்தை மெதுவானுல்,	கபடம்.
11.	கீச்சுகுரலாயிருந்தால்,	செய்நன்றிசொல்லுதல்.
12.	ஊமையானுல்,	மிக்கபாவம்.

XIV. கன்னம்.

எண்.	உருவம்.	பயன்.
1.	உயர்ந்திருந்தால்,	சுகம்.
2.	சதைபருத்திருந்தால்,	பூர்த்தியான செல்வம். மிகுந்தபோகம்
3.	சிங்கம், யானையொத்த கன்னமிருந்தால்,	தேசாதிபதித்வம்.
4.	மாம்ஸமின்றி, சுஷ்கி, ஆழ்ந்து, ...ற்பமீசையைப்பெற்றிருந்தால்,	பாபம், துக்கம், பாக்யஹீனம், அடிமைத்தொழில்.
	...ட்டால,	அரசு.
	...த்தால்,	செல்வம்.
	...மருவிருந்தால்,	செல்வம், கல்வி.
8.	இரண்டு கன்னத்திலும் வலப்புற மயிர்சுழியானால்,	வார்த்தை சிரேஷ்டம்.
9.	இடப்புற மயிர்சுழியானால்,	வறுமை.

XV. தாள்வாய்.

1.	தாள்வாய்ப் பருத்து இரண்டாகவிருந்தால்,	அரசு.
2.	தாள்வாய் ஒருமையானால்,	வறுமை.
3.	வலச்சுழிம...னால்,	பொசிப்பு.
4.	இடச்சுழியி...ரானால்,	வறுமை.
5.	தாள்வாயில் மருவிருந்தால்,	போகம், கிலேசம்.
6.	நடுதாள்வாயில் மருவிருந்தால்,	தீர்க்காயுசு.
7.	கீழ்தாள்வாயில் மருவிருந்தால்,	சுகபோசனம்.
8.	மேல்தாள்வாயில் மருவிருந்தால்,	சோரம்.

XVI. செவி.

1.	தொங்குகிறகாதானால்,	தநம்.
2.	அழகியசுழியோடு பருத்து மிருதுவாயிருந்தால்,	சுகம்.
3.	எலிக்காதுபோன்றிருந்தால்,	புத்திபூர்த்தி.
4.	முளைபோன்றிருந்தால்,	சேனாதிபதித்வம்.
5.	தட்டையாயிருந்தால்,	மிகுந்தபோகம்,
6.	நீண்டு, மயிர்நெருங்கியிருந்தால்,	தீர்க்காயுசு.
7.	மிகவும் பருத்த காதானால்,	மஹாபோகியான அரசு.
8.	குறுகியிருந்தால்,	தரித்திரம்.

எண்.	உருவம்.	பயன்.
9.	சுஷ்கியிருக்கிறகாதானால்,	பாவத்தொழில்.
10.	தொங்கியும், நரம்புள்ளதும், கோணியிருக்கிறகாதானால்,	கொடியதொழில்.
11.	மேல்செவி உள்ளடங்கியிருந்தால்,	வஞ்சகம்.
12.	உள்செவி பருத்திருந்தால்,	வறுமை.
13.	வலதுசெவியில் மருவிருந்தால்,	ஞானம்.
14.	இருசெவியில் மருவிருந்தால்,	பழிச்சொல்.
15.	விசாலமான ரந்திரத்தைப் பெற்றிருந்தால்,	குரூரத்தன்மை, வறுமை, அற்பாயுசு.

XVII. கழுத்து, பிடரி.

1.	பிடரி, மயிர்நரம்புகளோடிருந்தால்,	சிறந்தது,
2.	பிடரி விசாலமாயிருந்தால்,	நோய், வறுமை.
3.	பிடரியில் ரேகை யிருந்தால்,	சுகம்,
4.	கழுத்து சங்குபோன்றிருந்தால்,	தேசாதிபதித்வம்.
5.	உருண்டையாயிருந்தால்,	சுகம், தனம்.
6.	எருமைக்கிடா கழுத்தைப்போன்றிருந்தால்,	சூரத்தன்மை.
7.	வக்கிரமாயிருக்தால்,	கோட்சொல்லல்.
